வைத்திய சந்திரிகா

Jan 1926

JL
L:5m211,N25VC
N26.1.8
210157

Registered No. M. 2084.

# வைத்திய சந்திரிகா

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி தமிழ்மாதம் முதல் வாரத்தில் வெளிவரும்.

உள்நாடு சந்தா ரூ. 2. வெளி நாடு சந்தா ரூ. 3.

புத்தகம் 1 குரோதனஸூ தைமீ பகுதி 8

விஷய சூசிகை.


| | | பக்கம். |
|---|---|---|
| சிகித்ஸை :— | பத்திராதிபர் | ... 1 |
| ஓர் கூற்று :— | | ... 5 |
| மன உணர்ச்சியும், வியாதி வேகமும் | ஸ்ரீபார்த்தஸாரதி, திருச்சி. | ... 6 |
| வைத்திய உலகம் :— | | ... 9 |
| ஆகாரம் :— | | ... 10 |
| வைத்திய சாரம் :— | பண்டிட் நாராயண ஐயங்கார் | ... 100 |


Pandit, S. NARAYANA IYENGAR,
**Editor and Publisher.**

விலாசம் :— வைத்தியசந்திரிகா, கரூர்.

**Vol. 1 January 1926 No. 8**

...ed at the " Vivekabanu Press," Karur.

31 OCT. 1930

KARUR

JUN 1930

SL
L:5m21,N25v2
N26.8.
21015

# Talismans and Charms.

**For those People to Avoid all Sorts of Misfortunes and enter the Gates of Successful Life.**

| | Rs. | As. |
|---|---|---|
| For Honour, Riches, Learning and Greatness ... | 7 | 8 |
| For Health, Physical Strength, etc. ... | 7 | 8 |
| For Power of Eloquence, Speeches, etc. ... | 7 | 8 |
| For Success in any Undertaking or Litigation, etc. | 10 | 0 |
| For Success in Sport, Racing, Cards, Games of Chance, etc. ... | 7 | 8 |
| For Success in Spiritual and Religious Life ... | 10 | 0 |
| For Success in Trade and Business ... | 10 | 0 |
| For Men's Love to Women ... | 7 | 8 |
| For Women's Love to Men ... | 10 | 0 |
| For Love of Opposite Sex, Attractive Power ... | 7 | 8 |
| For Agricultural Prosperity, Farming, Good Crops etc. | 7 | 8 |
| Farming, Good Crops, etc. ... | 7 | 8 |
| For Success in Mining Plumbago, etc. ... | 100 | 0 |
| For Success in Gemming. ... | 225 | 0 |
| Rabbi Solomon's Special Talisman for every success. | 15 | 0 |
| Specially valued and worn by every successful Hebrew, 2nd quality ... | 21 | 0 |
| 1st quality ... | 30 | 0 |

Note :— A money Order or G. C. Notes will bring the Talisman to your door. One Extensive Life Reading Rs. 15, two Rs. 25, three Rs. 30 or more at a time at Rs. 10 per reading.—Remit with birth date, Always the full amount should be remitted in advance. No V. P. P.

Apply to: **D. A. RAM DUTH, Astrologer,**
No. 30 & 55 (V. C.) Cheku Street, Colombo. (Ceylon).


## வைத்திய சந்திரிகாவைப்பற்றி

### சில பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

தாய்நாடு:— [illegible] வைத்திய சந்திரிகையில் அரிய விஷயங்கள் பல மலிந்து கிடக்கின்றன. ஆசிரியரின் அரிய திறமை இவ்வியாசங்கள் மூலம் நன்கு தெரியவருகின்றது. ஆசிரியர் அவர்கள் ஆயுர்வேத வைத்தியத்தில் நிபுண ரென்பதையும் பொது விஷயங்களில் [illegible] இவ்வியாசங்களும் பத்திரிகையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. வைத்திய சந்திரிகா ஆயுர்வேத வைத்தியத்தின் மகிமையை நன்கு விளக்கிக்காட்ட முற்பட [illegible] இலங்கைக்கும் தமிழ் இப்பத்திரிகை [illegible] வேண்டுமென்று [illegible] ஜுனி-மீ 23-உ.

## சிகித்ஸை.

சென்ற மூன்று, ஆறு சந்திரிகைகளில் வைத்தியன் அறியவேண்டிய விஷயங்கள் நான்கில் இரண்டு அம்சங்களை விசாரித்தோம். இனி மூன்றாவதாகிய சிகித்ஸை என்பதை கவனிப்போம். நமது பெரியோர்கள் சிகித்ஸையை இருவகைகளாகப் பிரித்திருக்கின்றனர். முதலாவது ஹேது ப்ரத்யநீகம் அல்லது காரணத்தைக்களைதல். சரீரத்தில் (system) வியாதியால் எந்த அம்சம் கெட்டிருக்கின்றது, அதன் காரணமென்ன வென்பதைத் தெரிந்து அந்த காரணத்தைக் களைந்துவிடுதல். இதுவே பிரதான சிகித்ஸை. இந்த சிகித்ஸையால் வியாதி நிவர்த்தியாகாவிடில் அப்பொழுது இரண்டாவது சிகித்ஸையைச்செய்யவேண்டும். இரண்டாவது சிகித்ஸை வியாதி ப்ரத்யநீகம். அதாவது வியாதியைக்களைதல். வியாதியை நிவர்த்திக்கக்கூடிய மருந்துகளைக் கொடுத்தல் எனப்பொருள். இதை திருஷ்டாந்தத்தால் நிரூபிக்கலாம். ஓர் சதுப்பு நிலத்தில் நீர்க்கசிவு அதிகமாகவுள்ள இடத்தில் ஒருவர் வசிப்பதாக வைத்துக்கொள்வோம். ஈரக்கசிவாலும் சூரியகிரணம் நன்கு பரவாததாலும் அந்த இடத்தில் விஷக்கொசுக்கள் உண்டாகி தொந்திரவு கொடுக்கின்றன. அப்பொழுது கொசுக்களால் உண்டாகும் தொந்திரவை எப்படி விலக்கலாம். நமது முன்னோர்கள் கூறும்விதமாக ஹேதுப்ரத்யநீகம் அல்லது காரணத்தைக் களைதல் என்ற முதல் சிகித்ஸையைச் செய்யவேண்டும். அதாவது கசிவான அந்த நிலத்தில் ஒரு கஜம் மண்ணைத் தோண்டி அப்புறப்படுத்திவிட்டு அந்த அளவுக்கு ஆற்றுமணலைக் கொட்டி நன்றாக உயர்த்திவிடுவதுடன் அந்த இடத்தில் சூரியகிரணம் நன்றாக வீசும்படி அக்கம்பக்கங்களிலுள்ள கொடிசெடிகளை அப்புறப்படுத்த வேண்டும். இவ்விதம் செய்வதால் பூமிகாய்ந்து போவதால் கொசுக்களுக்கு காரணமாக ஈரக்கசிவு அற்றுப்போய் விடுகின்றது. இவ்விதம் செய்தும் கொசுக்கள் உபத்திரவமிருந்தால் அப்பொழுது சிற்சில விஷப்புகை முதலியவைகளால் நிவர்த்திசெய்வது இரண்டாவதாகிய வியாதி ப்ரத்யநீகம், ஆனால் முதல் சிகித்ஸையை நடத்தியபிறகு இரண்டாவது சிகித்சைக்கு அவசியமென்ன என்று சிலர் கேழ்க்கலாம். சில சமயங்களில் காரணத்தைக் களைந்துவிட்டாலும் அதனால் உண்டாகிய தொந்திரவு நிலைத்து அதற்கு தனிபரிஹாரம் செய்தல் அவசியமாகின்றது. முன்

சொல்லிய உதாஹரணப்படி சதுப்பு நிலத்தை பரிஷ்காரம் செய்வதால் கொசுக்களின் உத்பத்தி நிச்சேஷமாகத் தடுக்கப்பட்டாலும் ஏற்கனவே உண்டான கொசுக்களின் நிவர்த்திக்கு புகை முதலிய சாதனங்களைத் தேடவேண்டியது அவசியமாகின்றது. மற்றொரு உதாரணமும் காட்டக்கூடும். ஒரு வீடு நெருப்புப்பற்றி எரியும்பொழுது நெருப்பு மற்ற பக்கங்களில் அணுகாவண்ணம் முன் ஜாக்கிரதைசெய்யவேண்டியது முதல்காரியம். பற்றிய இடங்களில் ஜலத்தைக்கொட்டி நெருப்பை யணைப்பது அடுத்தகாரியம். ஆகவே சுதேசநூல்கள் சிகித்ஸா முறையில் இவ்விரண்டு வழிகளையும் பிரதானமாக போதிக்கின்றன.

“ ஏவமர்யாகபி வ்யாதீர் ஸ்வநிதான விபர்யயாத் |
சிகித்ஸேதனுபந்தேது ஸதிஹேது விபர்யயம் |

த்யக்த்வா யதாயதம்வைத்யோ யுஞ்ஜ்யாத் வ்யாதிவிபர்யயம் | ”

“ எல்லா வியாதிகளுக்கும் காரணத்தைக் கண்டறிந்து காரணத்தை நிவர்த்திக்க வழிதேடவேண்டும். அவ்விதம் செய்வதால் காரணம் நிவர்த்தியாவதுடன் வியாதியும் தானாக நிவர்த்தியாகும். மரத்திற்கு காரணமான ஆணிவேரை மாத்திரம் வெட்டிவிட்டாலும் சிலநாட்களில் மரம் தானாக காய்ந்துபோவது போல வியாதியும் தணியும். அவ்விதம் வியாதி நிவர்த்தியாகாவிட்டால் அப்பொழுது வியாதியைத் தணிக்க வேறு ஔஷதங்களைக் கொடுக்கவேண்டும். ”

பிளேக் முதலிய வியாதிகளில் பூச்சிகளால் அவ்வியாதி சம்பவித்தாலும் அப்பூச்சிகளைப் பரிகரித்து வியாதியைத் தணிப்பதென்பதுடன் நிற்காமல், அப்பூச்சிகள் சரீரத்தில் வியாபித்ததால் சரீரத்தில் எந்த அம்சம்கெட்டு இவ்வியாதி உண்டாயிற்றென்று அதைகவனித்து அதை சீர்திருத்த முயலவேண்டும். அப்பொழுதும் வியாதி நிவர்த்தியாகாவிட்டால் பிறகு அந்தப்பூச்சிகளை க்கொன்று வியாதியை விலக்க மருந்து கொடுக்கவேண்டும். இதுவே சுதேச முறைகளின் தத்வம். இந்த இரண்டுவித சிகித்சையிலும் மற்ற முறைகளைவிட மேன்மையான அம்சம் ஒன்று கவனித்தல் அவசியம். அதாவது எந்த வியாதிக்கு ஔஷதம் கொடுத்த போதிலும் அது வியாதியைத் தணிப்பதுடன் பொதுவில் சரீரத்திற்கு ஓர்பலத்தையும் அளிப்பதே. உதாஹரணமாக நிலவேம்பை எடுத்துக்கொள்வோம். அன்னிய முறைகளில் மலேரியா என்ற வியாதிக்கு கொய்னா என்ற மருந்து உபயோகப்படுவதுபோல சுதேச முறைகளில் நிலவேம்பு என்ற ஓர் கடைச்சரக்கு விசேஷமாக மலேரியாவிலும், சாதாரணமாக காய்ச்சல்களிலும்



தனித்தும் மற்ற சரக்குகளுடன் சேர்த்தும் உபயோகிக்கப்படுகின்றது. இவ்விரண்டிற்குமுள்ள தாரதம்யத்தைப் பொதுவில் கவனிப்போம். காய்ச்சலைத் தணிக்க எந்த அளவில் கொய்னாவை உபயோகிக்கவேண்டுமோ அந்த அளவில் வெறுங்காலங்களில் டானிக்காக உபயோகிக்க முடியாது. காய்ச்சல்களிலும் அதே அளவில் சிலநாட்கள் விடாமல் உபயோகித்தால் பல துர்குணங்கள் நேரிடுகின்றன. சிறிய அளவில் டானிக்காக கொடுக்கப்படுகின்றது. ஆனால் நிலவேம்போவெனில் காய்ச்சலைத் தணிக்க கொடுக்குமளவிலேயே பலமாதங்கள் உபயோகித்தாலும் யாதொரு துர்குணமும் நேரிடுவதில்லை. சுருக்கமாகக் கூறுங்கால் சுதேச ஔஷதங்கள் யாவும் எவ்வளவுமாதம் உபயோகித்தாலும் தீங்கற்றதாகவும் வியாதியைப் பரிஹரிப்பதுடன் ஒவ்வொன்றும் சரீர ஆரோக்கியத்திற்கு சாதனமாகவும் இருக்கின்றன. இதைப்பற்றி பின் ஒருதடவை விரிவாக ஆராய்வோம்.

முற்கூறிய சுதேச ஔஷதங்கள் இருவகையாகின்றன. ஒன்று சோதன மருந்துகள். மற்றொன்று சமன மருந்துகள். சோதனமருந்தாவது. — அவ்வியாதி திரும்பவராவண்ணம் செய்யும் ஔஷதம். இது சுதேச முறைகளுக்கு மாத்திரம் ஏற்பட்டது. அம்மை குத்துதல்போன்ற சில மருந்துகள் ஆங்கிலத்திலும் இவ்வித குணத்தைக் கொடுக்கவில்லையோவென சிலர் கேழ்க்கலாம். அது உண்மையே; அம்மை மருந்து அவ்வியாதியை வரவொட்டாமல் மாத்திரம்செய்யும். நமது மருந்துகள் சரீரத்தில் பற்றியிருக்கும் வியாதிகளை நிவர்த்திக்கின்றன. வியாதியை வராமல் பாதுகாப்பதும் வந்த வியாதியையும் நிவர்த்திசெய்து பிறகு சரீரமுள்ளவரை திரும்பிவராமல் செய்வதும் ஆகிய இருகாரியங்களும் சுதேச மருந்துகளுக்குள்ள விசேஷ அம்சங்கள். சமன மருந்தாவது—வந்த வியாதியை பரிகரிக்கும்மருந்து.

“ நசோதயதியத் தோஷாந் ஸமாந் நோதீரயத்யபி,
ஸமீகரோதி விஷமான் சமனம். ”

“ சோதன மருந்துகள்போல வியாதியை அறவே ஒழிக்காமலும், சரீரத்தில் இயற்கையிலுள்ளவைகளுக்கு தீங்கிழைக்காமலும், இயற்கைக்குஅதிகமாக விருப்பவைகளை ஒழுங்குசெய்யும் மருந்துகளுக்கு சமனமருந்துகள் எனப்பெயர் ”

சமனம் என்ற பதமே மருந்துகளின் தன்மையை விளக்குகின்றது: இந்த சமன மருந்துகள் ஏழு வகையாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றது. (1) பாசனம் (2) தீபனம் (3) பசி (4) தாகம் (5) சரீரப்

பயிற்சி அதாவது exercise என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவது (6) வெய்யில் (7) காற்று.

இதே "பாசனம் தீபனம் க்ஷுத்த்ரிட்வ்யாயாமாதப மாருதா:" என்று சொல்லப்படுகின்றது. பாசனமாவது — சரீரத்தில் விஷமித்ததிரிதோஷங்களை பக்குவமாகும்படிசெய்யும் ஔஷதம். (வைத்திய சாரத்தில் காய்ச்சல் சிகித்சையில் பாசனகிஷாயங்கள் சொல்லியிருப்பதைப்பார்க்கவும்) தீபனமாவது — அக்னி விருத்தியடையும்படி செய்யும் மருந்துகள். அதாவது எந்த வியாதியும் அக்னி துர்பலத்தாலேயே உண்டாவதால் (ரோகாஸ்ஸர்வேபிமந்தேக்நௌ என்று சொல்லப்பட்டிருக்கின்றது) சில ஔஷதங்களால் அக்னியை நன்றாக விருத்தியாக்குவதால் வியாதிதணியுமென்று பொருள். பசியாவது—இது எல்லாரும் அறிந்ததே. எந்த வியாதியிலும் உபவாஸம் (fasting) செய்வதால் வியாதிக்கு மூலகாரணங்கள் தளர்ச்சியை யடைகின்றன. அதாவது துராஹாரங்கள் நன்றாக ஜீர்ணமாகாமல் சிற்சிலபாகம் குடலிலேயே தங்கிவிடுவதாகவும் அதற்கு ஆமம் என்று பெயரென்றும் வாத பித்த சிலேஷ்மங்கள் நிலைதடுமாறி வியாதியை யுண்டுபண்ணும்பொழுது இந்த ஆமத்துடன் கலந்துவிடுவதாகவும் சுதேச நூல்கள் கூறுகின்றன. அப்பொழுது அந்த ஆமநிலைமையில் உபவாஸம்செய்தால் ஆமம் நிவர்த்தியாகின்றது. இந்த உபவாஸம் சிற்சில வியாதிகளையே நிவர்த்திசெய்யும். விவேகமின்றி சில வியாதிகளில் உபவாஸம் செய்தால் மரணம் வரை தீங்கை விளைவிக்கும். உதாஹரணமாக க்ஷயவியாதியில் ஏற்கனவே ஜீவாதாரமான சத்துக்களை அழித்துவரும் நிலைமையில் இவ்வுபவாஸம் செய்தால் வியாதி பின்னும் சரீரத்தை துர்பலம் செய்து விருத்தியாகும். உபவாஸம் சற்று அனுகூலமாகவிருப்பதுபற்றி சிலர் அளவுகடந்த மதிப்பு கொடுக்கின்றனர். அது பேதமையென்பதை பிறகு கவனிப்போம். தாகமாவது — நீரை அருந்தாமலிருத்தல், ஹிருதயம் துர்பலமாகவிருக்கும் சில வியாதிகளில் அதாவது ஹிருதயம் குழாய்களின்வழியக ரக்தத்தை சரீரத்தில் பரவும்படிசெய்யக்கூடாத துர்பல நிலைமைகளில் தண்ணீர் முதலிய திரவ பதார்த்தங்களை அதிகமாக உபயோகித்து ஹிருதயத்திற்கு அதிகவேலை கொடாமலிருப்பதற்காக நீர் குடிக்காமலிருத்தல். அதிசாரம் முதலிய வியாதிகளிலும் நீரை அதிகம் உட்கொள்ளாமலிருந்தால் அதன் மூலமாக வியாதியும் சற்று தணியும். (இந்த விவரங்கள் வைத்திய சாரத்தில் அதிசாரம் முதலிய வியாதிகளின் தலைப்பில் வெளிவரும்) சரீரப்பயிற்சி — இது எல்லாரும் அறிந்ததே. இது அவரவர்கள் சரீரசக்திக்குத் தக்கபடி பலவகைப்பட்டிருக்கும்.



சரீரப்பயிற்சியால் பல வியாதிகள் தணியும் என்பதை சுதேச் நூல்களே எல்லா தேசங்களுக்கும் கற்றுக்கொடுத்தனவென்பதை இது நன்கு நிரூபிக்கின்றது. வெய்யில்—பல வியாதிகளை சூர்ய கிரணங்களே நீக்க வல்ல சக்தியடைந்திருப்பதால் அதற்கேற்ப நோயாளிகளை வெய்யிலில் சக்திக்குத்தக்கபடி சிலநிமிஷங்கள் அல்லது சிலமணிகள்வரை கிடத்தல். இது ஓர் தனிமுறையாக சில தேசத்தாரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு நம் தேசத்திலும் தத்காலம் சில விடங்களில் உலாவுகின்றது. காற்று — சில நோயாளிகளை நல்ல காற்று வசதியான விடத்தில் காற்று நன்றாக படும்படிசெய்தல். இது தத்காலத்திலும் open air treatment என்ற பெயருடன் சில ஆங்கில வைத்தியர்களால் கையாளப்பட்டுவருகின்றது. ஆகவே தத்காலத்தில் உலகமெங்கும் பரவிவரும் அலோபதி இதுவே இங்கிலீஷ்வைத்தியம், ஹோமோபதி, கூனி ட்ரீட்மெண்டு முதலிய சகல முறைகளும் நம் சுதேசமுறைகளின் ஒவ்வோர் பாகங்களை மாத்திரம் அனுசரித்தவையாகின்றன. இவை யனைத்தையும் தனக்குள் அடக்கிக்கொண்டதே பரிபூர்ண சுதேசமுறை. ஆனால் அன்னியர்கள் ஒவ்வோர் அம்சத்தை நம்நூல்களிலிருந்து கைகொண்டனரேயன்றி அதன் நுட்பங்களை இன்னும் அறிந்தபாடில்லை. இவைகளைப்பற்றி பின்பு ஆராய்வோம்.

## ஓர் கூற்று.

ஜனவரி மாதம் 22-உயில் சென்னை ஆங்கிலவைத்திய கலாசாலையில் அகில இந்தியா ஆங்கிலவைத்தியர் மகாநாடு ஒன்றுகூடிற்று. அதில் ஆங்கிலவைத்தியர்களுக்கு வருமானம் குறைந்துபோகிறதாக ஸ்ரீமான் டாக்டர் யூ. ராமராவும், சுதேச வைத்தியர்களின் போட்டியால் ஆங்கிலவைத்தியர்கள் கஷ்டப்படுவதாக மேஜர்ஜனரல் ஸைமன்ஸும் கூறியுள்ளார்கள். ஆங்கில வைத்தியர்கள் சிற்சில சௌகரியங்களைப்பெற அவர்கள் செய்யும் பிரயத்தினத்தை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். டாக்டர் யூ. ராமராவ் அவர்கள் ஒரு விஷயத்தை கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஜனங்களின் சௌகரியத்திற்காக வைத்திய வசதியை அரசாங்கத்தார் அதிகரிக்கச்செய்யவேண்டுமே யொழிய சிலர் படித்து பட்டம் பெற்றதற்காக அதிக சம்பளத்தில் உத்யோகம் கொடுக்கவேண்டுமென்று கேழ்ப்பது எப்படி நியாயமாகும். அப்பொழுது வக்கீல்களும் இவ்விதம் கூட்டம் கூடி ஏதாவது சௌகரியம்பெற விரும்பலாம். பி. ஏ. வகுப்பில் தேறி குமா

ஸ்தா உத்யோகம் பலர் பார்க்கவில்லையா. அதுபோன்ற வருவாயால் ஆங்கில வைத்தியர்கள் ஏன் திருப்தியடையக்கூடாது. மேஜர் ஜைமன்ஸ் அவர்களின் கூற்று மிகவும் விநோதமாக விருக்கின்றது. சுதேசவைத்தியர்களுடன் ஆங்கில வைத்தியர் போட்டிபோடுவதில் யாருக்கு கஷ்டம் நேரிடும். ஆங்கில வைத்தியம் அரசாங்கத்தால் வெகுகாலமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. தேவவைத்தியமென கொண்டாடப்படுவது. இது மிகுந்த இக்காலத்தில் இவர்களுடன் போட்டி போட்டு தத்தளிப்பது சுதேசவைத்தியரென யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடும். மேஜர் ஜெனரல் அவர்கள் கூறுவது உண்மையானால் சுதேச மருந்துகளுடன் ஆங்கில மருந்துகள் போட்டி போட்டு சமாளிக்க முடியவில்லையென்றே நினைக்க நேரிடும். போட்டிபோட முடியாமலிருப்பதற்கு காரணம் என்னவென்பதையும் டாக்டர் அவர்கள் கூறியிருந்தால் நன்றாக விருந்திருக்கும். நமக்குத் தெரிந்தமட்டில் போட்டி போட முடியாமலிருப்பதற்கு காரணம் நான்காக விருக்கலாம். 1, அரசாங்கத்தார் ஆதரவு. 2. சுவல்பதுகைக்கு மருந்துகொடுத்தல். 3. ஜனங்களின் அறியாமை. 4. குணம் மிகுந்திருத்தல். இவைகளுள் முதல்பாகம் ஆங்கில வைத்தியத்திற்கே சொந்தமானது. இரண்டாவது காரணத்தை நாம் ஆமோதிக்கின்றோம். இதற்காக சந்தோஷப்படவேண்டியதே. அன்னியர்களும் சுவல்பதுகைக்கு வைத்தியம் செய்வதை யாரும் தடுக்கவில்லை. மூன்றாவது காரணத்தை நாம் ஒப்பமுடியாது. ஜனங்கள் புது நாகரீகத்தில் மூழ்கி அன்னிய முறைகளையே பெரும்பாலும் விரும்புகின்றனர்என்பது பிரத்யக்ஷம். நம் நாட்டில் விளையும் கரிசலாங்கண்ணியை அன்னியநாட்டிற்குக்கொண்டுபோய் அதற்கு ஆங்கிலத்தில் வேறு பெயர் வைத்து மினுமினுப்பான சீசாவில் அழகான லேபிள் ஒட்டிவந்தாலல்லது நம்மவர்களுக்கு அபிமானம் உண்டாவதில்லை. நான்காவது காரணம்தான் சரியானதாகும் என நினைக்கவேண்டியிருக்கிறது.

---

# மன உணர்ச்சியும், வியாதிவேகமும்.

ஸ்ரீ பார்த்தஸகன், திருச்சி.

**மனித சரீரத்தின் அமைப்பு மிகவும் விநோதமானது. அதைக்குறித்து அதிக ஆழமாகவும், சம்பூரணமாகவும் ஆராய்ச்சி செய்து முடிவுகளை வெளியிடக்கூடிய விசாலமான அறிவும், சாஸ்**



திரப் பயிற்சியும் அடியேனுக்கு போதாது. இருந்தாலும், வியாதி நிவர்த்தியில் நோயாளியின் மனோ நிலைமை, அவனுடைய உணர்ச்சி விசேஷங்கள் அவனுடன் பழகும் வைத்தியர் பணியாளர் முதலியவர்களுடைய மனோநிலைமை முதலியன செய்யும் அரிய வேலைகளை அடியேன் அறிந்தமட்டில் சந்திரிகா நேயர்கள் முன்னிலையில் தெரிவிக்கஉத்தேசம்.

மனம்வேறு, தேகம்வேறு; அவைகளின் இயக்கங்களுக்குள் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று சிலர் தவறாக கருதக்கூடும். அவைகள் இரண்டிற்கும் மிக மிக நெருங்கிய உறவுஉண்டு. ஒன்றினுடைய குறைவற்ற நிலைமையே அன்றி பாழ்பட்டஸ்திதியே மற்றொன்றின் சுபாவ சலனத்தை பெரிதும் பாதிக்கும்.

பஞ்சபூதத்தாலாகிய இந்த சதைக்கூடு இந்திரியசலனங்களால் ஆளப்பட்டு வருகிறதென்பதை நாம் கூறவேண்டியதில்லை. இந்திரியங்களின் இயக்கங்களுக்கு மூலகாரணமாய் இருக்கும் உணர்ச்சி வேற்றுமைகளை சிருஷ்டிப்பது மனநிலைமை. எண்ணங்களின் சக்தியின் வலிமையைப்பற்றி எடுத்துரைத்தல் சாத்தியமல்ல அது எதையும் செய்யுவல்லது. மனிதன் தன்மனதால் சாதித்துக்கொள்ளமுடியாத அபூர்வ சித்தியொன்றும் இந்த பிரபஞ்சத்தில் கிடையாது. மனவாக்கு காயங்களாலும் உணரமுடியாத பரம்பொருளின் பரமலக்ஷணங்களை அறிந்து வழிபடவும் பிரதான கருவியாக விளங்கும் மனதின் சேஷ்டைகளையே அவனுடைய வாழ்க்கை ஸ்திதி பொருத்திருக்கிறது. ஒருவனுடைய பொருள்நிலைமை முதலியன எவ்வாறு இருப்பினும் அவன் வாழ்நாள் சந்தோஷமாகவோ அல்லது துக்கமாகவோ நடைபெற்றுவருவது மன அமைதியையும், திருப்தியின்மையையுமே சார்ந்திருக்கிறதென்பது அனைவரும் அறிந்த உண்மை. "போதுமென்ற மனமே பொன்செயும் மருந்து" என்ற மூதாட்டியின் முதுமொழியும் இதையே வலியுறுத்தும்.

சரீர அவயவங்களின் சலனமாறுதல்களை பெரிதும் விளக்கவல்ல உணர்ச்சிகளில் சிருஷ்டிகர்த்தாவான மனதை சரியான நிலைமையில் வைத்திருந்தாலன்றி தேகத்தை நோயின்றி காப்பாற்றுதல் வெகு சிறமமானவேலை. எப்படி மனிதனுடைய ஆசாரக்குறைவோ சுத்தக்குறைவோ வியாதி உற்பத்திக்கு ஆஸ்பதமாக இருக்கின்றனவோ அதேமாதிரி உணர்ச்சிகளும் நோய்களை உண்டாக்கும். ஆற்றல் உடையன. நோயாளி தீவிர உணர்ச்சிகளுக்கு ஆளாகுதல் அனர்த்தமாகும். அவனுடைய மனநிலைமை பெரிதும் வியாதியில் வேற்றுமை

ஏற்படுத்தும். நோய்கள் பெரும்பாலும் அவயவங்களின் இயற்கையான சலனங்களில் திரிதோஷகோபங்களால்ஏற்படக்கூடிய விபரீத போக்காலேயே விளைகின்றன. உணர்ச்சிச் செறிவுகள் தம் தீவிரவேகத்துடன் சரீரத்தின் சுபாவத்திற்கு மாறுபட்ட சலனங்களை தேகத்தில் உண்டாக்கினவுடன் திரிதோஷங்களில் மாறுதல் ஏற்படுகிறது. அடுத்த நிமிஷத்தில் அபாரமான அனர்த்தம் விளைக்கும் வியாதிகள் தோன்றுகின்றன.

ஆகவே பிணியாளன் எந்த விதமான வேகமான எண்ணங்களையும் கலக்கங்களையும் உண்டாக்கவல்ல உணர்ச்சிகளுக்கு உள்ளாகக்கூடாது. அவனுடன் இருப்பவர்களும் அதிக சந்தோஷத்தையே அன்றி பெரிய துக்கத்தையே தரக்கூடிய விஷயங்களை அவன் முன் பேசுதல் பெரிய ஆபத்தைத்தரும். வியாதியின் கொடுமை உச்சஸ்திதியில் இருக்கும் தருவாயில்தான் நமது ஜனங்கள் தங்கள் வருத்தத்தை கண்ணீர் மூலம் அவனுக்கு அறிவித்து அவனுடைய அவஸ்தையை பன்மடங்கு விர்த்திசெய்வதுடன் பிணியின் வீர்யத்தையும் அதிகப்படுத்துவது சகஜமாயிருக்கிறது. வியாதியின் வேதனையால் வருந்தும் நோயாளிக்கு அத்யந்தப்பிரியமான விஷயங்களைக் குறித்த சம்பாஷணை பெரிதும் தீங்குவிளைக்கும்.

நோயாளியின் பிணி சீக்கிரம் தீருவது ஒருமட்டில் மருந்தின் சக்தியைப் பொருத்திருந்தாலும், அவனைச் சுற்றியிருப்பவர்களின் நடைமுறையும், விசேஷமாக வைத்தியனின் இன்சொல்லுமே பெரிதும்நன்மைபயக்கத்தக்கன. மனோதத்துவநூலாராய்ச்சியையே தமது வாழ்நாள் கொள்கையாகக் கொண்ட ஆலிவர்ஸ்வெட் மார்டன் (Oliver Sweat Marden) என்ற ஒரு அமெரிக்காநிபுணர் "ஆபூர்வசக்திகள் வாய்ந்த கோடிக்கணக்கான மருந்துகளைவிட வைத்தியனுடைய ஒரு சிறிய புன்முறுவல் வியாதி நிவர்த்தியில் ஆச்சர்யகரமாக வேலைசெய்யும்" என்று கூறுகிறார். மேலும் பிணி தீருவது நோயாளியின் நம்பிக்கையும் பெரும்பாலும்சார்ந்திருப்பதால் தனக்கு சிகிச்சை செய்யவந்திருக்கும் வைத்தியனுடைய ஞானத்திலும், குணத்திலும் பிணியாளனுக்குஅத்தியந்த விசுவாசம்இருத்தல் இன்றியமையாததாகிறது. உலகில் பிறந்த யாவரும் சமுகத்தால் சகல கார்யங்களையும் சாதித்துக்கொள்ளக்கூடுமென்பது அனைவரும்அனுபவத்தில் அறிந்து கொண்டிருக்கவேண்டிய உண்மை. ஆனால் சதா புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருக்கும் மலர்ந்த முகத்தின் உதவி நற்பெயர்வாங்கி நாலுபேருக்கு நன்மைசெய்ய விரும்பும் மருத்துவனுக்கு அத்தியாவசியமாகிறது. வியாதியஸ்தனுக்கு மன அமைதி



அளிக்கும் ஆதரவு நிறைந்த வார்த்தைகளும் அன்பொழுகும் முகமும் பொருள் சேர்க்கும் கொடியநோக்கமின்மையும் சிறந்தவைத்ய லக்ஷணங்கள் என்று வைத்திய கிரந்தங்கள் முறையிடுகின்றன. கோபமும், படபடப்பான வார்த்தைகளும் உள்ளவன் வைத்திய சாஸ்திரத்தை அப்யசிக்க அனருகன் என்று நூல்கள் விலக்கிவிட்டன.

ஆகவே நோய்களை உண்டாக்கவோ அல்லது அவைகளை அதிகரிக்கவோ செய்யும் வல்லமை அதிதீவிரஉணர்ச்சிகளுக்கு இருப்பதால் நோயாளியின் மனம் உணர்ச்சிச் செறிவுகளுக்கு ஆளாகாவண்ணம் பாதுகாத்தல் அவன் சுற்றத்தாரையும் விசேஷமாக பிரதான சிகிச்சாதுரந்தரனை வைத்தியனையும் பொருத்திருக்கிறது. அடியேன் சந்திக்க அவகாசம் ஏற்பட்டவைத்திய பட்டதாரிகளில் பலர் மேற்கூறிய முக்கிய வைத்திய லக்ஷணங்கள் அமையப் பெறாதவர்களாகவே இருப்பதாக தெரியவருகிறது சுதே சமுறைகளை அனுஷ்டிப்பவர்களிலும் சுமுகவைத்திய நண்பர்களைக்காண்பது துர்லபமாயிருக்கிறது. பிணியாளனுடைய நன்மையை உத்தேசித்து சுமுகத்தன்மையை வைத்தியர்கள் வளர்ப்பது அருமையாயினும் அவர்களுடைய செல்வாக்கு செல்வம் இவைகளின் அபிவிருத்தியை உத்தேசித்தாவது அதை போஷித்துப்போற்றுவது அவசியமாகும்.

---

## வைத்திய உலகம்.

---

பாட்னாவில் ஆயுர்வேத கலாசாலை:— பாட்னாவில் ஒரு ஆயுர்வேதகலாசாலை ஏற்படுத்துவதற்கு, ஸ்தலசுய ஆட்சி இலாகா பொது சுகாதார இலாகா ஆகஇரண்டுமாக ஏற்பாடுசெய்துவருகின்றன. இதற்கு வருஷத்திற்கு 15540-ரூபாய் சிலவாகும்.

இங்கிலாந்தில் பைத்தியம்:— இங்கிலாந்தில் மனோவியாதியாலும் பைத்தியத்தாலும் அவஸ்தைப்படுபவர்களின் தொகை அதிகரிக்கின்றனவாம். அதற்கு பரிகாரம் என்னவென்பதை நிபுணர்கள் சேர்ந்து யோசித்து வருகின்றனராம்.

நிஜாம் ராஜாங்கத்தில் சுதேச வைத்திய பாடசாலை:— லக்ஷக்கணக்கான சிலவில் நிஜாம் ராஜாங்கத்தார் சுதேசவைத்தியப்பாடசாலை ஒன்று ஏற்படுத்தப்போவதாக தெரியவருகின்றது.

# ஆகாரம்.

---

**ஏழாவது சந்திரிகையின் 16-வது பக்கத்தொடர்ச்சி.**

தவிர ஆங்கிலகுணபாடத்தை யனுசரித்து வஸ்துக்களையறிவதால் நமக்கு அதிகமாக பயன்கிடைக்குமென்று நினைக்கஇடமில்லை உதாஹரணமாக அல்ப்யூமன் என்ற சத்து உடம்புக்கு அவசியமானது. பாலில்இந்தசத்து நூற்றுக்குநாலுவீதமும் அரிசியில் நூற்றுக்கு ஆறுவீதமும் மாமிசத்தில் நூற்றுக்கு 19 வீதமும் கோழிமுட்டையில் 13 வீதமும் உருளைக்கிழங்கில் இரண்டுவீதமும் கீரைகளில் ஒன்று முதல் இரண்டுவீதமும் பழங்களில் 0·5 முதல் ஒன்றுவீதமும் இருப்பதாகச்சொல்லுகிறார்கள். பாலைவிட அமிர்தகுணமுள்ள வஸ்து உலகத்தில் யாதொன்றும் கிடையாதென்பது எல்லாருக்கும் பொதுவானது. அதில் இந்தசத்தானது அல்பமாகவும் முட்டை முதலியவைகளில் அதிகமாகவுமிருக்கின்றது. இந்தகாரணத்தைக்கொண்டு பொதுவாகப்பார்த்தால் பாலைவிட மற்றவைகளே உயர்ந்தவைகளாகத் தோன்றும். இது காரணவாதம். உண்மைக்கு இதுபொருந்தாது. இந்த ஆகாரங்களால் சரீரபுஷ்டியாவதாக நினைத்தாலும் சரீரபுஷ்டியையே பெரிதெனமதித்த சார்வாகமதத்தினருக்கே பெருமையாகும். தீராத வியாதிகளில் சரீரரக்ஷணத்திற்காக சிலவஸ்துக்கள் வைத்தியநூல்களில் அனுமதிக்கப்பட்டாலும் சாமான்யகாலங்களில் அவைகளை உபயோகிப்பது சரீரஇயற்கைக்கேஒவ்வாது. இவ்விஷயத்தைப்பற்றி வாக்படர் கூறுவதாவது—சில அவசியமான சந்தர்ப்பங்களுக்காக சிலதகாதவஸ்துக்களையும் உபயோகிக்கச் சொல்லியிருப்பது உண்மையே. ஒவ்வொருவஸ்துக்களின் குணங்களை குணபாடத்தில் சொல்ல வேண்டியது நூலாசிரியரின்கடமை. அதையொட்டி கருணாநிதிகளான நமதுபெரியோர்களும் கோழிமுட்டை முதலியவஸ்துக்களின் குணங்களை கூறியுள்ளார். குணம் கூறியிருப்பதற்காக அவைகளை நாம் உபயோகிக்கவேண்டியது அவசியமென யாரும் சொல்லமுடியாது. நமது பெரியோர்கள் கருணைசாலிகளான போதிலும் வஸ்துக்களின் குணங்களை மறைத்துச்சொல்வது நியாயமாகாததுபற்றியே எல்லாவற்றிற்கும் விபரமாக குணங்களை விவரித்தனர். மரணம்நேர்ந்தாலும் தகாத வஸ்துக்களை நாம் உபயோகிக்கலாகாது. " சரீரம் பூரிப்பதைமாத்திரம் பெரிதாகநினைக்காமல் சரீர ஆரோக்கியத்தையே பெரிதாகமதிப்பது நம்சுதேசமுறை. இதற்கே ஸாத்வீக ஆகாரமெனப்பெயர். இவ்வித ஆகாரத்தில் சரீர ஆரோக்கியம் பெருகுவது மன்றி பாரமார்த்திக



முறைக்கும் ஏற்றதாகின்றது. நாம் வைத்திய ஹோதாவில் வஸ்துக்களை இனி ஆராயப்போவதால் பாரமார்த்திக முறைக்கு இது எவ்விதம் உதவுகின்றதென்பதைப்பற்றி விவரிக்கப்போவதில்லை. சுத்தஸாத்வீகஆகாரங்களையேநாம்தெரிந்து உபயோகிக்க வேண்டும். அவைகளால்சரீர போஷணையுடன் மனதும்நிர்மலமாகின்றது. சரீரத்தில் உண்டாகும் வியாதிகளில் மனதும் ஓர் அளவுபாதிக்கப்படுமென்றும் மனதில் அமைதியின்மையால் பலவியாதிகள் உண்டாவதாகவும் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். ஆகையால் மனதையும் சரீரத்தையும் வியாதிகளுக்கு இலக்காக்காமல் காப்பாற்றும் ஆகாரங்களே ஸாத்வீக ஆகாரங்கள். வியாதிகள் வந்தபிறகும் இந்தசாத்விக ஆகாரங்களே பத்தியம் என்றபெயருடன் வழங்கப்படுகின்றன. ஆகாரங்களை நியமத்தோடு உட்கொள்பவர்களுக்கு பலவியாதிகள் காணுவதில்லை இந்தஆகாரங்களில் நாம் சாகவர்க்கத்தை பெரும்பாலும் ஆராய்வோம். ஆகாரவஸ்துகளின் குணங்களைத் தெரிந்துகொள்வதற்கு முந்தி அதன் ரூபங்களை கவனித்தல் அவசியம். அவைகள் ஏழுவகையாகின்றன.

(1) சுபாவம்—அதாவது ஆகாரவஸ்துக்களின் தன்மை. இயற்கையிலேயே சிலவஸ்துக்கள சில குணங்களைப் படைத்திருக்கின்றன. உதாஹரணமாக உளுந்துதான்யம் இயற்கையிலேயே குருவாகும் (இந்தகுணங்களால் சரீரத்திற்கு உண்டாகும் நன்மை தீமைகளை பிறகு ஆராய்வோம்) பாசிப்பயிறு சுபாவத்திலேயே இலேசானகுணமுள்ளது. இவ்விதம் ஒவ்வொருவஸ்துக்களிலும் பிறவியிலேயே சிலகுணங்கள் இருப்பதை பரிசிலனைசெய்து உபயோகிக்கவேண்டும். மாமிசங்களிலும் இவ்விதமே பிறவியில் சில குணங்கள் உண்டு. பன்றி மாம்சம் இயற்கையிலேயே குருவானது. மான்மாம்சம் இயற்கையிலேயே இலேசானது.

(2) செயற்கை—ஆகாரவஸ்துக்களுக்கு சில ஸம்ஸ்காரங்களால் இயற்கைகுணம் மாறி செயற்கை குணம் உண்டாகின்றது. அதாவது பிறவிகுணம் மாறி புதிய குணம் உண்டாகின்றது. ஆகையால் பிறவி குணங்களையே கவனித்துக்கொண்டிராமல் செயற்கையாலுண்டாகும் குணங்களையும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஜலம், நெருப்புசம்பந்தம் அலம்புதல் (கழுவுதல்) கடைதல், தேசம், காலம் வாஸநம், பாவனை, காலம் கிடத்தல், பாத்திரம், முதலியவைகள் வஸ்துக்களின் இயற்கை குணத்தை மாறச்செய்கின்றன. உதாஹரணமாக அரிசி பிறவியில் குருவானது. அதற்கு ஜலமும் கழுவுதலும் நெருப்பு சம்பந்தமும், உண்டாகி அன்னமாக ஆகும்பொழுது பிறவி

யிலுள்ள குணம் மாறி இலகு என்றகுணத்தையடைகின்றது. கடைதலால் வஸ்துக்களின் குணம்மாறுகின்றது. தயிர் சுபாவத்தால் குழாய்களில் ரக்தஓட்டத்தைத்தடுத்து கைகால் உடம்புகளில் வீக்கத்தையுண்டுபண்ணும் குணமுள்ளது. அதைக்கடைந்து மோராக்கினல் அப்பொழுது இயற்கைக்கு மாறுக வீக்கத்தைத்தணிக்கும் குணம் உண்டாகின்றது. நம் தென்னுட்டின் தயிர்க்கு அவ்வித துர்குணம் கிடையாது. காசிபக்கங்களில் தயிருக்கு இவ்வித துர்குணம் உண்டு. அந்த தயிரை அப்படியே உபயோகித்தால் தயிர்கட்டிகள் நன்ருக உடைந்து ஜீர்ணமாகாமல் சிறுகட்டிகளாக தயிர் அப்படியே மலத்துடன் போவதைப்பார்க்கலாம். அந்தத்தயிர் முழுவதும் ஜீர்ணமாவதில்லை. ஜரித்த சில அம்சங்கள் ரக்தத்தில் கலந்தால் அவைகள் ரக்த ஓட்டத்தை தடுத்துவிடுகின்றன. ரக்த ஓட்டம் தடைபடுவதால் ரக்தத்தில் இருக்கும் ஜலாம்சம்மாமிசங்களில் இரங்கிகைகால்களில் வீக்கம் காண்கின்றது. இதன் விபரம் வீக்கம் என்ற தலைப்பில் வைத்தியசாரத்தில் வெளிவரும். இவ்விதம் உண்டாகும் வியாதியை தயிரிலிருந்து உண்டாகும் மோர் நிவர்த்திசெய்கின்றது. ரக்தஓட்டத்தில் தடையை நீக்கி ரக்தத்தை குழாய்களில் சரிவர ஓடச்செய்யும் சக்தி நிறையப்பெற்றிருக்கிறது மோர். தேசமாவது—ஒரேபதார்த்தத்தை இடம் மாற்றுவதால் உண்டாகும் குணம். ஒரே பதார்த்தத்தை வெளியில் வைத்திருந்தால் அதற்கு குணம் வேருகவும் அதேபதார்த்தத்தை சாம்பலுக்கு நடுவில் புதைத்திருப்பதால் குணம் வேருகவும் மாறுகின்றது. பசுகட்டினஇடத்தில் பதார்த்தத்தை புதைப்பதாலும் தானியங்களின் நடுவில் புதைத்துவைத்திருப்பதாலும் (இதற்குத் தான்யபுடம் எனப் பெயர்) குணம்மாறுவது பல ஔஷத முறைகளில் விபக்தமாகச்சொல்லப்பட்டிருக்கின்றது. காலத்தாலும் குணம்மாறும்—பால் கரந்தவுடன் சூட்டோடு சாப்பிடுவது அமிருதமாகின்றது, சற்றுநேரம் வைத்திருந்தால் அதாவது நுரையடங்கியவுடன் அதற்கு குணம்மாறிவிடுகின்றது. அந்த துர்குணத்தைவிலக்கவே நெருப்பில்காய்ச்சுவது அவசியமாகின்றது. அவ்விதம் காய்ச்சாமல் பச்சையாகவே நேரம்கழித்தபாலை உபயோகித்தால் வயிற்றில் மிகுந்த வாயுவேதனை உண்டாகின்றது. வாஸநமாவது—இன்னுமொரு பதார்த்தத்துடன் சற்று நேரம் சேர்த்துவைத்து பிறகு பிரித்துவிடுதல் கருநெய்தல்புஷ்பத்தை அரைமணி பச்சைத்தண்ணீரில் சேர்த்திருந்துபிறகு புஷ்பத்தை எடுத்து நீரைஉபயோகிப்பதால் பித்தத்தின்குணத்தை குறைக்காமல்மட்டுப்படுத்துகின்றது. பச்சைஜலத்தை ஆகாரகாலம் நீங்கலாக மற்றகாலங்களில் உபயோகிப்பதால் அதிலும் பசியானகாலத்தில் வெறும் வயிற்றில்உபயோகித்தால் குடலில் செ



ன்றவுடன் அந்த நீர் இரைப்பையில் உண்டாகும் பித்தநீரை (ஜீர்ணத்திற்கு அவசியமானவஸ்துவை) உண்டாகாமல் தடுத்துவிடுகின்றது. அஜீர்ணம், அதிசாரம், முதலியவியாதிகளுக்கு காரணமாகின்றது. பித்தநீர் இயற்கைக்கு அதிகமாக உண்டாகும் காலங்களில் அதாவது பித்தவியாதிகளில் கருநெய்தல்புஷ்பம் வாஸனை பெற்ற அதேகுளிர்ந்தநீர் இயற்கைக்கு அதிகமாக உண்டாகும் பித்தநீரை மாத்திரம் குறைப்பதுடன் பித்தநீர்சரியான நிலைமையில் உற்பத்தியாகும்படியும் செய்கின்றது. பாவனையாவது—ஒரேவஸ்து அல்லது வேறுவஸ்தவை அதனுடைய ரசம் அல்லது மற்றொன்றின் ரசத்தினுல் முழுகும்படிசெய்து பிறகு உலர்த்திக்கொள்வது இவ்விதம் செய்வதால் வஸ்துவின் குணம் மாருவிட்டாலும் அதிககுணம் உண்டாகின்றது. வேறுவஸ்துக்களின் ரஸத்தால் பாவனைசெய்தால் குணம் மாறுவதும் அல்லது அதிகப்படுவதும் நியாயமாதலால் அதை இங்குசொல்லவேண்டிய அவசியமில்லை ஒரே வஸ்துக்கு அதனுடைய ரஸத்தாலேயே உண்டாகும் குணவிசேஷத்தையே இங்கு குறிப்பிடுகிறோம். நெல்லிக்காயைப் பொடிசெய்து அந்தப்பொடியை அதனுடைய ரஸத்தாலேயே ஏழுதடவை பாவனைசெய்தால் அதன் சீதகுணம் அதிகமாகின்றது. அதாவது சாமான்யநெல்லிக்காய் பொடியை பத்து நாள் உபயோகித்தால் உண்டாகும் குணம் நான்கு நாட்களிலேயே பாவனைசெய்த நெல்லிக்காய் சூர்ணத்தால் உண்டாகும்.

காலங்கடத்தலாவது—நெல் முதலிய தானியங்களை ஒருவருஷம் வைத்துப்பிறகு உபயோகித்தல் புதிய அரிசி ஜீர்ணமாவது கடினம். அதே அரிசியை ஒருவருஷம்கழித்து உபயோகித்தால் லகுவாக ஜீர்ணமாகும். பாத்திரத்தால் குணம் மாறுபடும். அதாவது குளிர்ந்த ஜலத்தை தாம்பிர பாத்திரத்தில் வைத்தால் அதிலுள்ள துர்குணங்கள் விலகும். அதேபாத்திரத்தில் சுடுஜலத்தை வைத்து உபயோகித்தால் விஷமாகும். வென்னீரை வெண்கலபாத்திரத்தில் வைத்திருந்து உபயோகித்தால் அமிர்தமாகும். அதிலே குளிர்ந்தஜலத்தை வைத்து உபயோகித்தால் விஷமாகும்.

(3) கலப்பு—வெவ்வேறு குணமுள்ள இரண்டுவஸ்துக்களை ஒன்றசேர்த்து விட்டால் வேறுகுணமுண்டாகும். ஆதலால் இதையும் கவனித்து ஆகாரத்தையுட்கொள்ளவேண்டும். உதாரணமாக தேன், நெய் இவைகளை எடுத்துக்கொள்ளுவோம். தேன், நெய் இவைகளை தனித்தனியாக உபயோகிப்பதால் அமிருதகுணமே. ஆனல் இவையிரண்டையும் சரிபாகமாகச்சேர்த்து உபயோகித்தால் அது விஷமாக

கின்றது. பால், மீன் இவைகளை தனியாக உபயோகித்தால் சரீரத்திற்கு யாதொரு தீங்கும் உண்டாகாது. மீனை உட்கொள்ளும்பொழுதே பாலையும் சேர்த்து உபயோகித்தால் குஷ்டவியாதியையுண்டுபண்ணும்.

(4) அளவு—அளவுடன் ஆகாரத்தையுட்கொள்ளவேண்டும். அளவு அந்தந்த வஸ்துவின் குணத்தைப் பொருத்தது. வயிறுநிறைவது அளவு ஆகாது. சிலவஸ்துக்களின் குணத்தை யனுசரித்து அல்பமாகவுட்கொள்வதும் வயிறுநிறைய சாப்பிடுவதும் யுக்தமாகும். நெய் முதலியவைகள் அந்தந்த சரீரக்கூறுக்குத் தக்கவிதமாக அரை அல்லது ஒரு அவுன்சு உபயோகித்தால் சரீரத்திற்கு மிக்க நன்மையைவிளைவிக்கும். வயிறுநிறைய அதையே உட்கொள்ளுவது விபரீதமாகும். ஆகவே ஒவ்வொரு பதார்த்தங்களுக்கு அளவு தனித்தனியாகவிருக்கின்றது எல்லா ஆகாரங்களுமாகச் சேர்ந்து மொத்த அளவையும் கவனிக்கவேண்டும். மொத்த அளவுக்கு குறிப்பிட்டமதிப்பு கூறுவது அசாத்யம். அவரவர்களின் அக்னிபலம் சரீரக்கூறு இவற்றையனுசரித்துத்தான் மொத்தஅளவு சொல்லக்கூடும். மொத்த அளவை நிர்ணயமாக சொல்லக்கூடாவிட்டாலும் ஒருவாறு லக்ஷணம் சொல்லலாம். உட்கொள்ளும் ஆகாரம் முழுவதுமே குருவாகவிருந்தால் அப்பொழுது பாதிவயிறு சாப்பிடவேண்டும். ஆகாரம்முழுவதுமே இலகுவாக விருந்தால் அப்பொழுது வயிறுநிறைய சாப்பிடலாம். இதுதான் மொத்தஅளவு. அரைவயிறு முழுவயிறு என்று அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டம். குருவானஆகாரங்களுக்கு சாப்பிட்டில் அவா அடங்கி அல்ப திருப்தி ஏற்படுவது அடையாளமாகக் கொள்ளவேண்டும். லகுவான ஆகாரங்களுக்கு திருப்திஏற்படுவது அடையாளம். எதிர்த்துவரும்படி சாப்பிடுவது திருப்தியல்ல இவை இரண்டிற்கும் இன்னொருவிதமாக அடையாளம் சொல்லலாம். எந்தஆகாரமும் கஷ்டப்பட்டு ஜீர்ணமாகாமல் தொந்திரவில்லாமல் சுகமாக ஜீர்ணமாவதே.

(5) தேசம்—வஸ்துக்கள் உற்பத்தியான ஸ்தலம் உபயோகிக்கும் இடம் உபயோகிப்பவர் வசிக்கும் ஸ்தலம் இவைகளை கவனித்தே வஸ்துக்களை உட்கொள்ளவேண்டும். அதாவது ஒரேவஸ்து உற்பத்தியாகும் ஸ்தலபேதத்தால் குணம் மாறுதலையடைகின்றது. ஹிமவத்கிரியில் உண்டாகும் எல்லாவஸ்துக்களும் சுபாவத்தால் குருகுணமுள்ளது. பொட்டல் பிரதேசங்களில் உண்டாகும் எல்லா வஸ்துக்களும் சுபாவத்தால் லகுகுணமுள்ளது. ஒரேகோதுமை வடஇந்தியாவிலும் தென் இந்தியாவிலும் உண்டாகின்றது. வடஇந்தியா கோதுமை குணத்தில் உயர்ந்ததாகவும் தென்னாட்டு கோதுமை குணத்தில் குறைவாகவுமிருக்கின்றது. நேபாளத்திலுண்டாகும் கஸ்தூரிக்கும் காஷ்மீர



த்தில் கிடைக்கும் கஸ்தூரிக்கும் குணத்தில்வித்தியாசமிருக்கின்றது. காரணம் ஸ்தலபேதமே. ஒரேவஸ்து ஒருஇடத்தில் விஷமாகவும் மற்றொரு இடத்தில் அமிருதமாகவும் ஆகின்றது. உதாரணமாக சில மலைகளில் உண்டாகும் ஆரஞ்சு முதலியபழங்கள் உற்பத்திஸ்தலத்தில் வியாதியை யுண்டுபண்ணுவதாகவும் அதேபழங்களை மலையைவிட்டு கீழேகொண்டுவந்து உபயோகித்தால் ஆரோக்கியமாகவும் இருக்கின்றன. தேசத்தையொட்டி சிலநல்லவஸ்துக்கள்கெடுதலைவிளைவிப்பதாகவும் சில கெட்டவஸ்துக்கள் நன்மையைவிளைவிப்பதாகவும் இருக்கின்றன. குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம் செய்வது ஆரோக்யமாகிலும் பள்ளத்தாக்குபிரதேசங்களில்வென்னீர்ஸ்நானமேஹிதம். சுடுநீர்சாப்பிடுவதுநன்மையாகிலும் மேட்டுப்பாங்கான உஷ்ணதேசங்களில் குளிர்ந்தஜலமே நல்லது. இவ்விதமேகாலபேதத்திலும் வித்தியாசம் தென்படுகின்றது.

(6) காலம்—காலத்தை அனுசரித்தும் வஸ்துக்களையுபயோகிக்க வேண்டியதாகின்றது. சுடுநீர் குடிப்பது ஹிதமானாலும் வெய்யில் காலத்தில் குளிர்ந்த ஜலமே ஹிதம். பனிமழைகாலங்களில் தனியாக பாலைகுடிப்பது ஹிதமில்லாவிட்டாலும் வெய்யில்காலத்தில் பாலையுபயோகிப்பது அவசியமாகின்றது. சுரங்களில் வென்னீர்குடிப்பது நலமாகிலும் மிகுந்தபித்தசுரத்தில் சுடுநீர் நன்றாக குளிர்ந்தபிறகே உபயோகிக்கவேண்டியது.

(7) உபயோகம்—சரியானவஸ்துக்களையும் நன்கு உபயோகிக்க வேண்டும். அதாவது உபயோகிக்கும்வஸ்துக்கள் ஆரோக்யத்திற்கு ஏற்றவைகளாகவிருந்தபோதிலும் காலமறிந்தே உபயோகிக்கவேண்டும். காலையில் மலசுத்தி சரியாக ஆகவேண்டும். சிறுநீர் கிரமமாக தடையின்றி போகவேண்டும். ஹிருதயம் சுத்தமாகவேண்டும். வாத பித்த சிலேஷ்மங்கள் தன்நிலைமையில் இருக்கவேண்டும். ஏப்பம்சுத்தமாகவும் பசிநன்றாகவும் வரவேண்டும். அபானவாயு நீளமாக நன்றாக துர்கந்தமின்றி வெளியேரவேண்டும். கைகால் முதலிய இந்திரியங்கள் சுருசுருப்பாக இருக்கவேண்டும் சரீரம் கனமில்லாமல் இலேசாகவிருக்கவேண்டும். இவ்விதம் லக்ஷணங்களைக்கண்டே நல்ல ஆகாரங்களை உபயோகிக்கவேண்டும்

குறிப்பு—ஆகாரவிஷயங்களில் வஸ்துக்களை கவனிப்பதுடன் முக்கியமாக கவனிக்கவேண்டியது சரீரக்கூறு. பால் அமிருதகுணமுள்ளதென விருந்தபோதிலும் சில சரீரக்கூறுகளுக்கு ஒத்துக்கொள்ளாமல் தீங்கையும் விளைவிக்கின்றது. அதற்கு ஆங்கிலத்தில் இடியோஸிங்க்ரஸி (Idiosyncrasy) எனப்பெயர். சரீரக்கூறை அவரவர்களே நிதானித்துக் கொள்ளவேண்டும். இதுபிறரைக்கொண்டு தெரிந்து

கொள்வது சாத்தியமில்லை. எந்தவஸ்து தன்சரீரத்துக்கு ஒத்துக்கொள்ளுகின்றது. எது ஒத்துக்கொள்ளவில்லையென்பதை அநுபவத்தின் பேரில் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகாரவஸ்துக்களின் குணத்தை விவரிக்குமுன் இன்னும் சிலமுக்ய விஷயங்களை யறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

உஷ்ணமாகவே சாப்பிடவேண்டும்—கெட்டிபதார்த்தங்கள் அல்லது திரவபதார்த்தங்கள் யாவையும் உஷ்ணமாகவே சாப்பிடவேண்டும். அதிஉஷ்ணம் கூடாது. மிதமான உஷ்ணத்துடன் சாப்பிடவேண்டும். அதிகஉஷ்ணமாகஉட்கொள்ளுவதால் இரைப்பைமுதலியவைகளின் உள்பாகத்திலிருக்கும் கபமும் (வழவழப்பான பாகம்) அதையுண்டுபண்ணும் ஜவ்வுகளும் துர்பலத்தையடைகின்றன. அதிகம்குளிர்ந்தபிறகு உபயோகிப்பதால் இரைப்பைமுதலியவைகளில் பித்தஜலம் உண்டாவதைதடுத்துவிடுகின்றது. ஆகையால் இளஞ்சூடாகவேவஸ்துக்களையுபயோகிக்கவேண்டும். அவ்விதம்செய்வதால் சுவையும் அதிகரிக்கின்றது இரைப்பை முதலியவைகளில் பித்தஜலத்தை வேண்டியவளவு உற்பத்தியாகும்படி செய்கின்றது. உசிதமானகாலத்தில் சரியாக ஜீர்ணமாகின்றது. சிறுகுடல் முதலியவைகளில் வாயுவு அதிகம் உற்பத்தியாவதில்லை. அதோடு வாயுவையும் வெளியேறச்செய்கின்றது உள்அவயவங்களில் கபத்தையும் திட்டப்படுத்துகின்றது. சிலவஸ்துக்கள் நன்றாக ஆறியபிறகு உபயோகித்தாலும் பாதகமில்லை. ரொட்டி முறுக்கு, முதலியபண்டங்கள் ஆறியபிறகுகூட உபயோகப்படுத்தப்படலாம். அநுபானமாக உஷ்ணஜலத்தை சாப்பிடவேண்டியது. பழையசோறு முதலியவைகள் கீழ்சொன்ன காரணங்களால் உபயோகப்படுத்தப்படக்கூடாது. நமது தென்இந்தியாவில் அதை அதிகம் உபயோகித்தபோதிலும் இந்தியாவின் மற்றபாகங்களில் உபயோகிப்பதில்லை. இதைப்பற்றி விரிவாக பிறகு ஆராய்வோம்.

பசையுள்ளதாகவே சாப்பிடவேண்டும்—அதாவது நெய்பால் தயிர் முதலியவைகளை நன்றாகசேர்த்தே உபயோகிக்கவேண்டும். வரட்சியான ஆகாரம் வெறுப்பை யுண்டுபண்ணும். பசையுள்ள ஆகாரத்தை யுட்கொள்ளுவதால் அக்கினிபலத்தை விருத்தி செய்யும். "கஹிஸ்நேஹமை மித்தேக்நௌ சமாயான்னம் ஸூகுர்வபி" நெய்முதலியஎண்ணை பசையுள்ள மருந்துகளால் அதாவது கிருதம் தைலம் முதலியவைகளால் அக்கினிபலம் உண்டாகும். அவைகளால் அக்கினிபலம் முதிர்ந்துவிட்டால் பிறகு எவ்வளவு குருவான ஆகாரம் உட்கொண்டாலும் அதனல் அக்னிபலம் பாதிக்கப்படாது. (தொடரும்(



இந்த முதல் வகுப்பில் அபத்தியங்களை உட்கொள்ளுதல் சிறுகுடலில் உண்டாகும் கிருமிகள், வெகுநாளத்திய மலபந்தத்தால் (coustipation) மலம் கோலிமாதிரிஆகி குடலில் தங்கிவிடுதல், சில விஷங்கள், இவைபோன்றவைகளால் உண்டாகும் அதிசாரங்களை அடக்கலாம்.

(2) நாடி மண்டலத்தில் (Nervous system) இயற்கைக், அதிகமான பரபரப்பு (Irritation) ஏற்படுதல்.

இந்த இரண்டாவது வகுப்பில் பயம், சோகம், முதலியமனோவிகாரங்களால் உண்டாகும் அதிசாரங்களை அடக்கலாம்.

(3) திடீரென அதிகக்குளிர்ச்சிதாக்குதலால் சரீரத்தில் ஸ்வேதகிரியை பாதிக்கப்படுதல்.

இந்த மூன்றுவகுப்பும் பெரும்பான்மையாகப் பிரிக்கப்பட்டதேயன்றி உண்மையில் இன்னும் பலவகுப்புகள் உண்டு. Blood Poison என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வியாதி ( அதாவது ரக்தத்தில் விஷாம்சம் கலந்து ரக்தம் கெட்டுப்போதல் ) யாலும் இது சம்பவிக்கும். முந்தி சொன்ன Typhoid என்ற சந்தத சுரத்திலும் நேரும். குடலில் புண் (canler) (இது Tuber Culosis என்ற ஓர் வகை க்ஷயவியாதியாலும் சில பூச்சிகளால் உண்டாகும். அல்லது சாமான்யமாக பூச்சிகளில்லாமலே உஷ்ணத்தால் குடல் புண்ணுகலாம்.) உண்டாவதாலும் இவ்வியாதி உண்டகலாம். இவ்வியாதி பெரியோர்களுக்கு உண்டாவதுபோல சிறு குழந்தைகளுக்கும் வருவதுண்டு. குழந்தைகளுக்கு தாறுமாறாக ஆகாரத்தைக் கொடுப்பதாலும் சரியாக பாதுகாப்பு இல்லாததாலும் இவ்வியாதிதாக்குகின்றது. குழந்தைகளுக்கு பற்கள் முளைக்கும் ஆரம்பத்தில் நரம்புகளுக்கு அதிர்ச்சியையுண்டுபண்ணி இவ்வியாதி ஆரம்பிக்கின்றது. இவ்வியாதி குழந்தைகளுக்கு கொள்ளைநோயாக (epidemic) வேனிற்காலத்தில் பல குழந்தைகளை பலிகொள்ளுகின்றது. இதற்கு காரணம் ஓர் புழுவாக இருக்கலாமென்று ஆங்கில வைத்தியர் ஊகிக்கின்றனர். வேனிற்காலத்தில் பூமி உஷ்ணப்படும்காலத்தில் இப்பூச்சிவேகம் அடைவதாகவும் இது சேற்றில் வசிப்பதாகவும் ஊகிக்கின்றனர். இது ஆகாரத்துடன் கலந்து குழந்தைகளின் சிருகுடலை யடைகின்றது. அக்குழந்தைகளுக்கு வேறு காரணங்களால் அக்னிமந்தப்பட்டிருக்கும் சமயத்தில் இக்கிருமிகள் தன் வேகத்தைக்காட்டுகின்றன. இப்பூச்சிகளால் உண்டாகும் விஷம் குழந்தைகளுக்கு வாந்தி, பேதி,

காய்ச்சல், இவைகளைக்கொடுத்து கடைசியாக மரணத்தையும் விளைவிக்கின்றது.

இவ்வியாதியின் காரணங்கள்:– அதிகமாக நீர்குடிப்பது முக்கியகாரணம். வியாதியால் மெலிந்த ஆடு மாடுகளின் இறைச்சி, தன் சரீரக்கூறுக்கு ஒவ்வாத ஆகாரங்கள், அதிகமாகஎண்ணெயுட்கொள்ளுதல், மாவுபண்டங்கள், முளைவெளிவந்ததானியங்கள் சாராயம்முதலியவைகள். இவைகளை யுட்கொள்ளுவதால் ஆகாரக்குடலிலும் சிறுகுடலிலும் வாயுவு விருத்தியடைந்து நிலை கெடுகின்றது. இயற்கைக்கு அதிகமான வாயு அவ்விடம் அடைவதால் குடல்களில் திரவபதார்த்தம் இயற்கைக்கு அதிகமாக உற்பத்தியாகின்றது. பிறகு மலத்தை இளகும்படிசெய்து வெளித்தள்ளுகின்றது. மலம் கெட்டிப்படாமல் நீராக பேதியாவதற்குக் காரணமென்னவெனில் "விஸ்ரம்ஸயத்யதோப்தாதும்" "சிறுகுடல் பெருங்குடல்களில் அதிகமாக திரவபதார்த்தத்தை யுண்டுபண்ணி அதை மலத்துடன் சேர்த்து வெளிப்படுத்துகை." அதாவது உட்கொண்ட ஆகாரம் இரைப்பைசென்றவுடன் அவ்விடத்தில் ஓர் பித்த ஜலத்துடன் கலந்து ஜீர்ணமாகி அவ்விடமிருந்து சிறுகுடலுக்கு வந்து அவ்விடத்தில் பித்த ஜலத்துடன் கலந்து நன்றாக ஜீர்ணமாகி பிறகு பெருங்குடலுக்கு வரும் காலத்தில் ஜலாம்சம் முழுவதும் குழாய்களால் நன்றாக உறுஞ்சப்பட்டு ஜலாம்சம் ரக்தத்தில் சேருகின்றது. கெட்டியான அம்சம் மலமாக பெருங்குடல் வழியாக சுற்றிவந்து மலதுவாரத்தின் வழியாக வெளியே தள்ளப்படுகின்றது. இந்த விஷயத்தை ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். சிறுகுடல்வாயுவால் இயற்கையாகதூண்டப்பட்டு தன்னுள்ளிருக்கும் வஸ்துவை மெதுவாக அசைத்து மேலேபோகும்படி செய்கின்றது. பெருங்குடலிலும் இவ்விதமே இயற்கைத்தொழில் நடைபெறுகின்றது. ஆனால் இத்தொழில் சிறுகுடலின்பாதிபாகம்வரை சற்று வேகமாகவும் பிற்பகுதியில் தாமதமாகவும் நடைபெறுகின்றது. வஸ்துக்கள் நன்றாக கரைந்து ஜீர்ணமாகி ரக்தக்குழாய்களால் நன்றாக உறிஞ்சப்படுவதற்காகவே பிற்பகுதியில் சிறுகுடல் இயற்கைத்தொழில் தாமதப்படுகின்றது. பிறகு பெருங்குடலில் ஆரம்பத்திலும் சத்துக்கள் நன்றாக உறுஞ்சப்படுவதற்காக சிறுகுடலின் பிற்பகுதியைவிட அத்தொழில் தாமதமாகவே நடைபெறுகின்றது. இத்தொழிலுக்கு ஆங்கிலத்தில் Peristaltic process என்று சொல்லுவார்கள். சிறுகுடலில் ஆகாரம் போகும்பொழுது சில திரவபதார்த்தங்களும் ஆகாரத்தோடு கலக்கின்றது. இக்குடல்களில் இயற்கைக்குஅதிகமாக வாயுவு உண்டாவதால் குடலின் தொழிலும் மிகவும் தூண்டப்படுகிறது

21015



ஆகாரத்தை உறுஞ்சும் குழாய்களும் பாதிக்கப்படுகின்றன. இயற்கைக்கு அதிகமாக திரவங்களும் சிறுகுடலில் உண்டாகின்றன. ஜீர்ணத்திற்கு முக்கிய காரணமாகிய பித்தமும் பலம் குறைவடைகின்றது. ஆகவே அதிசார வியாதியில் மலம் ஜலமாகப்போவதற்கு, காரணம் நான்கென சொல்லலாம். அவையாவன :—

(1) சிறுகுடலிலும் பெருங்குடலிலும் ஆகாரம் தாமதிக்கவேண்டியவளவு தாமதிக்கவொட்டாமல் அக்குடல்கள் சீக்கிரமாகவே ஆகாரத்தைத் தள்ளிவிடுதல்.

(2) ஆகாரத்தின் திரவ சத்துக்களை குழாய்கள் பூரணமாக உறுஞ்சாமல் நின்றுவிடுதல்.

(3) சிறுகுடலில் இயற்கைக்கு அதிகமாக திரவம் உத்பத்தியாதல்.

(4) பித்தத்தின் குணம் குறைவுபடுதல். ஆகிய இவைகளே.

இவ்வியாதியின் முன்குறிகளாவன :— மார்பு, மலதுவாரம், வயறு இவைகளில் மிகுந்த வலியும், சரீரம் இளைத்துப்போதலும், மலபந்தமும், வயிற்றுப்பொருமலும், அஜீர்ணமும் ஆகியஇவைகளே.

பலவகைப்பட்டிருந்தபோதிலும் இவ்வியாதியை ஆறுவிதமாக பிரிக்கலாம்.

(1). வாதாதிசாரம் — மலம் ஜலமாகவும், கொஞ்சம் கொஞ்சமாகவும் மிகுந்த சப்தத்துடனும் வலியுடனும் போகும். நெருப்பில் வெந்த வெல்லம் நிறமாக (அதாவது தீய்ந்து கருப்பாக விருக்கும்) சற்று கபத்துடனும் நுரையோடும் மலம்போகும். ஆசனத்தில் வேதனைகாணும், வாய் உலர்ந்துபோகும், மலதுவாரத்தின் மடிப்புகள் வெளியே நழுவிவரும். (இதற்கு அடிதள்ளுதல் என்று பொதுஜனங்கள் கூறுவர்) மயிர் கூச்சல் உண்டாகும். நோயாளி வேதனையின் மிகுதியால் சப்தமிடுவான்.

(2) பித்தாதிசார லக்ஷணம் — மலம் மஞ்சளாகவும் கருப்பாகவும் அல்லது பச்சையாகவும் ரக்தத்துடனும் மிகதுர்கந்தமாகவும் இருக்கும். தாகம் தலை கிறுகிறுப்பு. வியர்வை, உடம்பு எரிச்சல், மல துவாரத்தில் வலியும் எரிச்சலும் தோன்றும். மலதுவாரத்தில் உஷ்ணமிகுதியால் வேக்காடு உண்டாகும். (அதாவது நெருப்பில்

கத்தரிக்காயைப்போட்டால் எவ்விதம் கன்னிப் போகுமோ அவ்விதம் மலதுவாரத்தில் சுற்றுப்பக்கங்களில் கன்னிப்போகும்)

(3) கபாதிசாரலக்ஷணம் — மலம் மிகுந்த நீராக இராமல் சற்று குழம்பியும், மிகுந்த கபம் சேர்ந்தும், மலம்போனவிடத்தில் தண்ணீரைவிட்டுக் கழுவினால் மிகுந்த பசையுடன் பூமியில் ஒட்டிக்கொண்டும், வெளுத்த நிறமாகவும் அடிக்கடியும், துர்நாற்றத்துடனும், விட்டாவலியுடனும் போகும். தூக்கம் அதிகம் உண்டாகும். சோம்பேரித்தனம், அன்னதுவேஷம், ஓக்காளம், இவைகள் தோன்றும். வயிறு கனத்திருக்கும். மலம்போனபிறகுகூட இன்னும் மலம்போக வேண்டுமென்றே தோன்றும்.

(4) சன்னிபாதாதிசார லக்ஷணம் — முந்தி சொல்லிய மூன்று லக்ஷணங்களும் கலந்திருத்தல்.

(5) பயாதிசாரம் — பயத்தால் மனது கலங்குகின்றது. மனது கெடுவதால் வாயு மிகுந்து பித்தபலத்தைக் குறைத்து அதை மிகுதியாக்கி மலத்தை வெளிப்படுத்துகின்றது. மலம் வேகமாகவும், உஷ்ணமாகவும், தண்ணீரில் மிதக்கக்கூடியதாகவும், தவிர வாத பித்தாதிசாரங்களில் சொல்லிய லக்ஷணங்கள் கலந்து இருக்கும்.

(6) சோகாதிசாரம் — மிகுந்த விசனத்தால் மனது கெட்டு உண்டாகின்றது. இதன் லக்ஷணமும் முற்கூறியதைப்போலவேயிருக்கும்.

இவ்வியாதி ஆமத்துடன்கூடியும் ஆமமில்லாமலும் இருக்கும். அதற்கு பரீக்ஷை யென்னவெனில் கால் அவுன்சு மலத்தை ஒரு பாத்திரத்தில் நிறைய நீர்வைத்து அதில் போட்டால் மலம் முழுகினால் ஆமத்துடன் கூடியதென்றும், மலம் மிதந்தால் ஆமமில்லாததெனவும் அறியலாம். தவிர ஆமத்துடன்கூடிய மலம் துர்கந்தமாக (அதிசாரத்தில் மலம் முழுவதுமே துர்கந்தமாகவிருக்கும். ஆனால் சற்று புளிப்புநாற்றத்துடன் கூடிய துர்கந்தமென இவ்விடத்தில் கொள்ளவேண்டும்.) இருக்கும். வயிற்றில் வாயு இரைச்சல் மிகுந்திருக்கும். ஓக்காளம் உண்டாகும். இவையில்லாமலிருந்தால் ஆமமில்லையென நினைக்கவேண்டும். ஆனால் ஆமமில்லாத கபம் மிகுந்த மலமும் ஜலத்தில் மூழ்கும். ஆகையால் ஜலத்தில் மூழ்குவதையே பிரதான லக்ஷணமாக நினைக்கக்கூடாது. மற்ற லக்ஷணங்களையும் கவனித்தே நிர்ணயிக்கவேண்டும். தவிர அதிசாரங்களில் ரக்தம் கலந்தும் கலக்கா



மலும் மலம் போகும். சில சமயங்களில் மலம் மிகுந்தும் ரக்தம் குறைந்தும் சில சமயங்களில் ரக்தம் மிகுந்தும் மலம் குறைந்தும் போகும். சில சமயங்களில் மல சம்பந்தமேயின்றி ரக்தம் மாத்திரம் போவதுமுண்டு. ரக்தக்கடுப்பு, ரக்த பித்தம், இந்த வியாதிகளிலும் மலத்துடன் ரக்தம்போகும். தனியாகவும் போகும். அவற்றிற்கும் இதற்கும் பேதத்தை ரக்தபித்தம் என்றவியாதியில் இனி விவரமாகச் சொல்லுவோம்.

அதிசார சிகித்சை— இவ்வியாதி காய்ச்சலுடன் சேர்ந்தும் வரும். எல்லா வியாதிகளுமே காய்ச்சலுடன் சேர்ந்தும் வரும். தனியாகவும்வரும் காய்ச்சலுடன் சேர்ந்த எந்த வியாதியும் கஷ்டசாத்தியம். தனியாக வந்தால் சுலபசாத்தியம். தனியாக வந்தமாத்திரத்தாலேயே எல்லா வியாதிகளும் சுலபமாக குணமாகுமென்று நம்பக்கூடாது. காய்ச்சலுடன் சேர்ந்திருப்பதைவிட தனியாகவருவது சற்று இலேசானது என்று கொள்ளவேண்டும். தனித்த வியாதிகளுக்கும் சாத்தியலக்ஷணம் அசாத்தியலக்ஷணம் நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இரைப்பை முதல் குடல்கள் இவ்வியாதியில் கெடுவதால் இவ்வியாதியின் ஆரம்பத்தில் உபவாஸம்விதிப்பது நல்லது.

உபவாஸம் விதிப்பது நல்லது. ஆனால் பயாதிசாரம் சோகாதிசாரம் இவைகளில் உபவாசம் செய்வது கூடாது. வியாதியின் ஆரம்பத்தில் உபவாசம் ஹிதமானாலும் உபவாசத்தை நீடித்து செய்யக்கூடாது. ஏனெனில் சரீரதாதுக்களை அழிப்பதே இவ்வியாதியின் சுபாவமானதால் உபவாசமும் சேர்ந்து நோயாளிக்கு மிகுந்த துர்பலத்தையுண்டுபண்ணும். வலி, வயிற்றுப்பொருமல், ஓக்காளம், இவைகள் மிகுந்திருந்தால் அப்பொழுது வாந்தி எடுக்கமருந்துகொடுக்கலாம். காய்ச்சல்வியாதியில் சொல்லப்பட்ட வாந்திமருந்தையே உபயோகிக்கலாம். இயற்கைக்கு ஒவ்வாத துஷ்டஆகாரங்களைஉட்கொண்டவுடன் இவ்வியாதி வருமாகில் வெளியேறும் மலத்தை கட்டுப்படுத்தக்கூடாது. குடல்கள் மிகுந்தவலிமையுடன் இருப்பதால் ஏற்காத ஆகாரங்களைத்தானாகவே வெளிப்படுத்தும். நிச்சேஷமாக வெளியானவுடன் தானாகதணியுமாதலால் இயற்கை வேலையை நாம்தடுக்கக்கூடாது. தவிரவயிற்றில் கெட்டஆகாரம் அதிக அளவுதங்கியிருக்கும்பொழுது அதை கட்டுப்படுத்தவும் இயலாது. ஒருசமயம் வயிற்றிலிருக்கும் கெட்ட ஆகாரங்களைக்கழிக்க இயற்கைக்குப் போதிய சக்தி இல்லாமலிருந்தால் அப்பொழுது இயற்கையை யனுசரித்து குடல் சுத்தமாக பேதிமருந்தை உபயோகிக்கலாம். வாந்தி அல்லது பேதி இவைகளை உண்டுபண்ண கொடுக்கப்படும் மருந்துகள் இலேசான

வைகளாக இருக்கவேண்டும். கடுமைகூடாது. ஒன்று அல்லது இரண்டுதடவை போகும்படி செய்யலாம். ஆனால் இக்காரியங்கள் பயிற்சி மிகவும் பெற்றவர்களாலேயே செய்யப்படவேண்டும். அதிசாரவியாதியில் எந்தநிலைமையிலும் இரண்டுதடவை பிரவர்தியாகும்படி மருந்து கொடுப்பது ஒரு தப்பிதமாகாது. நோயாளி மிகவும் துர்பலமான நிலைமையிலிருந்தால் மாத்திரம் மேற்படி மருந்துகளை உபயோகிக்கலாகாது. மலம் ஆமநிலைமையிலிருப்பதாகத்தெரிந்தால் அப்பொழுது பேதிமருந்துகளை கொடுக்கலாம். வயிற்றுப்பொருமல், உடம்பு கனத்தல், உடம்புவலி, உடம்புவிரைப்பு, இவைகள் மிகுந்திருக்கும் காலத்தில் கட்டாயமாக பேதிமருந்தை உபயோகிக்கவேண்டும். பேதிமருந்துகள் பலவகையானதால் எல்லாவற்றையும்விட கடுக்காய் மிகவும் இவ்வியாதியில் ஏற்றது. கடுக்காயைப் பொறுக்கிப்பெரியதாக எடுத்து அதைத்தட்டி உள்ளிருக்கும் கொட்டையை நீக்கி வெய்யிலில் உலரவைத்து பொடிசெய்து கொண்டு அரைரூபாயிடை முதல் ஒரு ரூபாயிடைவரையில் வென்னீர்ஜலத்தில் கலக்கிக்கொடுக்கலாம். அல்லது ஒரு ரூபாயிடை கடுக்காயைத்தட்டி விரையுடன் சுரகிஷாயங்களில் சொன்ன அளவுப்படி கிஷாயம்செய்து கொடுக்லாம். இரண்டு அல்லது மூன்றுதடவை பேதியாகும். இவ்வியாதியில் ஆகாரவிஷயத்தில் அபிப்பிராயபேதமுண்டு. ஆங்கிலவைத்தியத்தில் பாலும் பால் சேர்த்த கஞ்சிகளும் உபயோகப்படுகின்றன. ஆனால் சுதேசமுறைப்படி பால் பேதியாகும் இயற்கையுள்ளதாதலால் அதைஅதிகமாக உபயோகிக்கக்கூடாது. பசும் மோர் மெத்த அனுகூலத்தை விளைவிக்கும். புளிப்பில்லாதமோர் குடல்களை சுத்தம்செய்யும். பித்தத்தை இயற்கைக்கு கொண்டுவருவதுடன் ஆகாரசத்தை நன்றாக உறிஞ்சாத ரக்தக்குழாய்களை வலுப்படுத்தி அதன் தொழிலை செய்யத்தூண்டும். சிறுகுடலிலும் பெருங்குடலிலும்உண்டாகும்வாயுவைக்கண்டிக்கும். இவ்விதம் மிகுந்தகுணத்தைகொடுப்பதால் இதை தாராளமாக உபயோகிக்கலாம். பாலுக்கு பதிலாக மோரை சேர்த்து கஞ்சியாகக்கொடுக்கலாம். ஆனால் மோரை நெருப்பில் கொதிக்கவைக்கலாகாது. அவ்விதம் செய்வதால் அதன் குணம் முழுவதும் குறைந்துவிடும். மூன்றுமணிக்கு ஒருதடவை நாலு அவுன்ஸ் வீதம் கொடுத்து வரலாம். காய்ச்சல் இருந்தால் இதை உபயோகிக்கக்கூடாது. அப்பொழுது பாலை மிதமாகச்சேர்த்த கஞ்சிகளையுபயோகிக்கலாம். நன்றாக ஜீர்ணசக்தியுண்டாகும்வரையில் இலேசான கஞ்சி முதலியவைகளையே உபயோகிக்கவேண்டும். நீரை அதிகம் குடிக்கக்கூடாது. அதிலும் குளிர்ந்தஜலம் கூடவே கூடாது. குளிர்ந்தஜலம் வயிற்றில் சென்றவுடன் பித்தம் உண்டாவதைத்தடுத்துவிடுகின்றது. மிதமாக வென்னீர்தான் உபயோ



கிக்கவேண்டும். இவ்வியாதி நீடித்தால் கால்களில் விசேஷித்து பாதங்களில் வீக்கம் உண்டாகும். அதற்காக தனிசிகித்சை வேண்டுவதில்லை. இவ்வியாதியில் காய்ச்சல் இல்லாமலிருந்தால் பிரதிதினமும் ஸ்நானம் செய்துவரலாம். வென்னீரில் ஸ்நானம் செய்வது உத்தமம். சரீரப்பயிற்சி கூடாது. கஞ்சிமுதலிய பத்தியங்களை உட்கொண்டவுடன் இடதுபக்கமாக ஒருக்கணித்து முக்கால் மணிநேரம் படுத்திருக்க வேண்டும். ஏனெனில் இரைப்பையின் வலதுபக்கத்து ஓரத்தில் சிறுகுடல் ஆரம்பமாவதால் இடதுபக்கமாக சாய்ந்து படுப்பதில் ஆகாரம் இரைப்பையில் அதிககாலம் தங்கி ஜீர்ணத்தையடையும். வலதுபக்கமாக படுத்தால் இரைப்பை கெட்டிருப்பதால் ஆகாரத்தைச்சீக்கிரமாக சிறுகுடலில் தள்ளும்படி ஒத்தாசைசெய்வதாகும், "வாமபாகே சயாநஸ்ய" வியாதியஸ்தனும் ஆரோக்யமுள்ளவனும் ஆகாரமுட்கொண்டவுடன் சிறிதுநேரம் இடதுபக்கமாகவே படுத்திருக்கவேண்டும் என்று சொல்லப்படுவதால் இந்த சுகாதாரவிதியை எல்லாருமே அனுசரிக்கவேண்டியது அவசியம். இந்த வியாதியை உபேக்ஷித்தால் கிரஹணி என்ற கடுமையான வியாதிஉண்டாகுமாதலால் இதனைஉடனே தணிக்கவேண்டும். அதிசாரம் முற்றுவதுதான் கிரஹணி. கிரஹணீ என்ற குடலையொட்டிவருவதால் வியாதிக்கும் கிரஹணீ என்பார்கள். மூலவியாதியாலும் அதிசாரமுண்டாகலாம். மற்றும்பலகாரணங்களாலும் உண்டாகலாம். காரணத்திற்கு சிகித்சை செய்தால் அவைகளில் அதிசாரம் தணிந்துவிடும். அவைகளை அந்தந்தவியாதிகளில் விரிவாகச்சொல்லுவோம். வெள்ளாட்டுப் பாலை விசேஷமாக இவ்வியாதியில் எல்லா அவஸ்தைகளிலும் உபயோகிக்கலாம். காய்ச்சலுடன் கூடியிருந்தாலும் வெள்ளாட்டுப்பால் நன்மையைவிளைவிக்கும்.

எல்லா அதிசாரங்களுக்கும் மருந்து:—

(1) மலைதாங்கிவேர், வெப்பாலையரிசி, வெப்பாலைப்பட்டை, மாமஞ்சள், தேசாவரம், சுக்கு, இவைகளை வகைக்கு அரையேவீசம் ரூபாயிடை எடுத்து நன்றாக அரைத்து வென்னீரிலாவது அல்லது வெள்ளாட்டுப்பாலில் கலக்கி கால்ரூபாயிடை தேன்விட்டு தினம் மூன்றுதடவை உட்கொள்ளவும்.

(2) வெப்பாலையரிசி, வெப்பாலைப்பட்டை, அதிவிடயம் வகைக்கு காலேவீசம் ரூபாயிடை எடுத்து முன்போலசெய்துமுன்போல உபயோகிக்கலாம்.

(3) அதிவிடயம், பில்வப்பிஞ்சு, வெப்பாலைப்பட்டை, விலாமிச்சவேர், கோரைக்கிழங்கு, வகைக்கு கால்ரூபாயிடை எடுத்து இடி

த்து புதுச்சட்டியில்போட்டு சின்னப்படியில் கால்படி ஜலம் விட்டு நாலில் ஒன்றாக காய்ச்சி கொடுக்கவும். இவ்விதம் தினம் மூன்றுதடவை கொடுக்கலாம்,

குறிப்பு:—வெப்பாலைப்பட்டையை பச்சையாக உபயோகிக்கவேண்டும். காய்ந்தபட்டையில் குணம் கிடையாது. கிரஹணியில் சொல்லப்போகும் மருந்துகள் முழுவதையும் இதிலும் உபயோகிக்கலாம். இவ்வியாதியில் பலதொந்திரவுகள் உண்டாகும். அவையாவன— மலதுவாரம் வெந்துபோதல், மலதுவாரத்தின் உள்மடிப்புகள் வெளியேவந்துவிடுதல், மலதுவாரத்தில் கத்தரியால் கத்தரிப்பதுபோன்றவேதனை.

மலதுவாரம் வேந்துபோதல்:—இதற்குவடமொழியில் குதபாகம் எனப்பெயர். இதற்கு காரணம்—மலத்தில் பித்தம் அதிகம்கலப்பதும் அந்த இடத்தில் அதிக உஷ்ணம் தாக்குவதுமே. இதற்கு சிகித்சை— வியாதிதணிந்தவுடன் இதுவும் தணிந்துவிடும். அதுவரையில் சகிப்பது கடினமானதால் வெண்ணை அல்லது விளக்கெண்ணையை அடிக்கடி அவ்விடத்தில் தடவலாம். பசளைக்கீரையை அரைத்து அவ்விடத்தில் சற்று பெருமனாகபூசலாம்.

உள்மடிப்புகள் வெளியேவந்துவிடுதல்—இதற்கு வடமொழியில் குதப்ரம்சம் எனப்பெயர்—இதற்குகாரணம்—மலத்தை முக்கித்தள்ளுவதால் மலதுவாரத்தின் உள்பாகத்தில் இருக்கும் மடிப்புகள் வெளியேவந்துவிடுகின்றது. இதற்கு அடிதள்ளுதல் என்று பொதுஜனங்கள் சொல்லுவார்கள். அதிசார வியாதியில்லாமலே பலருக்கு இது தனியாக வருவதுமுண்டு. சரீரம் இளைத்து துர்பலமாயிருப்பவர்களுக்கு மலம் மிகவும் கெட்டியாக விருந்து முக்கிகஷ்டப்பட்டே வெளியேற்றப்படவேண்டிய தருணங்களில் இவ்வியாதி சகஜமாக நேருகின்றது. சிறியகுழந்தைகளுக்கும் நேரும். மூலம்தள்ளுதல் எனஇதை பலர் அழைக்கின்றனர்.

குறிப்பு:—சரீரம் இளைத்தும் மலம் மிகவும் கெட்டிப்பட்டுமே இவ்வியாதிபலருக்கு உண்டாவதால் சரீரத்தை புஷ்டிசெய்யவேண்டியது அவசியம். அயசெந்தூரம் முதலிய இரும்புசம்பந்தமான மருந்துகளை கொடுக்கக்கூடாது. ஏனெனில் அம்மருந்துகள் மூலத்தில் வேகத்தைக்காட்டும் சுபாவமுள்ளவைகள். ஆகையால் புஷ்டியுண்டுபண்ண பலகிருதங்களை உபயோகிப்பது நலம். பிரதிதினம் மலம் இளகிப்போகும் விதமாகவே ஆகாரங்களை சாப்பிட்டு வரவேண்டும்.



சொல்லப்போகும் சாங்கேரி கிருதத்தையும் உபயோகிக்கலாம். ராத்திரி படுக்கும்காலத்தில் விளக்கெண்ணை ஒருமிட்டைஉபயோகித்துவரலாம். மிளகாய், மிளகு, திப்பிலி, இஞ்சி, சுக்கு, போன்ற வஸ்துக்கள் வேதனையை அதிகரிக்கச்செய்யும். ஆனால் இந்தவியாதி பூர்ணமாக குணப்படுமென்றுசொல்லமுடியாது. நூற்றுக்குபத்துகேசுகள்தான் சௌக்கியமாகும். மோரை அதிகம் உட்கொள்ளக்கூடாது. பிரதிதினம் மலம் போகும் பொழுது மல துவாரத்தின் வெளியில் ஆள்காட்டிநடுவிரல் இவைகளை இரண்டு பக்கத்திலும் வைத்து தாங்கிக்கொண்டே மலத்தை வெளியேற்றவேண்டும். மூலம்தள்ளியேவாடிக்கையானவர்களுக்கு தினமும் மலம் போகும்பொழுது ஹிம்சைதான் ஆரம்பத்திலே சிகித்சை செய்தால்தான் வியாதிவிலகும். மூலம் தள்ளியிருக்கும் சமயத்தில் செய்யவேண்டிய சிகித்சையாவது—மூலத்தை குளிர்ந்தஜலத்தில் நனைக்கவேண்டும், மூலம் முழுவதும் விளக்கெண்ணையை நிரம்ப தடவி மெதுவாக விரல்களால் தள்ளிவிடலாம். தாமரைக்கொடியின் இளம்தழைகளை வேளைஒன்றுக்கு ஒரு ரூபாயிடை வீதம் நன்றாக மென்றுதின்றால் இது நிவர்த்தியாகும். அபானவாயுவு வெளியேற நடுவில் ஓட்டைவிட்ட ஓர் பதனிட்டதோலை ஒரு பக்கத்து நுனியை இரண்டாகக்கிழித்து கிழித்தநுனிகளை தொடைகளின் இடுக்குவழியாகவும், மற்றொரு நுனியை இடுப்புக்கு பின்புறத்திலுமாக கௌபீனமாக கட்டிவைக்கவேண்டும்

ஆஸனக்கடுப்பு அல்லது மூலக்கடுப்பு—இவ்வியாதியில் சேர்ந்தும் தனியாகவும் கடுப்பு மலதுவாரத்தில் காணும். மலம்போனபிறகு சிலநாழிகை வரையில் கடுப்பு இருந்து கொண்டிருக்கும். இதற்குக்காரணம் மூலத்தில் உஷ்ணமே. சிகித்சை—முள்ளெலித்தோலை ஒரு ரூபாயிடை சுமார் எடுத்து ஓர் காண்டியில் செந்தணல்விட்டு அதில் அந்தத்தோலைப்போட்டால் புகையுண்டாகும். அந்தப்புகை ஆஸனத்தில் படும்படி செய்யவும். மூலவியாதியில் சொல்லப்போகிற காட்டுக்கருணைக்கிழங்கு லேகியத்தை அந்த கிரமப்படி சாப்பிட்டாலும் தீரும்.

குறிப்பு—முள்ளெலி என்பது எலிகளில் ஓர் ஜாதி. அனேகமாக எல்லாஊர்களிலும் கிடைக்கும். அதன்தோலை சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். மதுரை கடைகளில் இது சாதாரணமாகக்கிடைக்கும். மலம்போகும் பொழுது உட்காருவதுபோல குந்தி உட்கார்ந்து புகைபிடிக்கவும்.

ஆஸனத்தில் கத்தரித்தல்போன்றவேதனை—இதற்கு வடமொழியில் பரிகர்த்திகா ரோகமெனப்பெயர். மலதுவாரத்தில் கத்தரிகொண்டு கத்தரிப்பதுபோல ஓர் கடுமையான வேதனைதோன்றும். இதுமற்றவியாதிகளுடன் கலந்தும் வரும். தனியாகவும்வரும். ஆஸனத்தில் உஷ்ணவாயு அதிகமாகி இந்த வியாதி தோன்றுகின்றது. இந்தவியாதியின் விபரம் சுதேச நூல்களில்தான் காணப்படுகின்றது மற்றமுறைகளில் நாளதுவரை இவ்வியாதி வர்ணிக்கப்படவில்லை. இதை மூலசம்பந்தமான வியாதியென்று சில ஆங்கிலவைத்தியர் எவ்வித சிகித்சை செய்தும் பலனில்லாமல் கடைசியாக சுதேச முறையால் வெகுசுலபமாக நிவர்த்திசெய்யப்பட்டது. Sulpher என்ற கந்தகசம்பந்தமான மருந்தை ஆங்கில வைத்தியத்தில் உபயோகித்துப்பார்த்தனர் இது வியாதி தெரியாமல் செய்தசிகித்சையாதலால் பலனளிக்காமற் போயிற்று.

சிகித்சை—புளியாரைத்தழை பச்சையாகக்கொண்டுவந்து ஒரு ரூபாயிடை தழையை ஜலம்விடாமல் வெண்ணெய்போல அரைத்து கொஞ்சம் பால் அல்லது ஜலத்தில் கலக்கி தினம் மூன்றுவேளை சாப்பிட்டுவரவும். இனிசொல்லப்போகும் சாங்கேரி கிருதத்தையும் உபயோகிக்கலாம்.

குறிப்பு:—புளியாரை சுலபமாக எல்லா ஊர்களிலும் கிடைக்கும் திருச்சிமார்க்கட்டிலும் பிரதிதினம் கீரைவிற்குமிடத்தில் கிடைக்கும். தண்ணீர் வற்றாதஇடங்களில் நிச்சயமாகக் கிடைக்கும். புதியகீரைகளை உபயோகித்தால் குணம் சீக்கிரம்தெரியும். பச்சையாகக் கிடைக்காவிட்டால் உலர்ந்த கீரையை தண்ணீரில் ஊறவைத்து அரைத்துக்கொள்ளவும்.

ரக்தாதிசாரம்—மலத்துடன் ரக்தம்கலந்துபோகும். அல்லது தனியாகவும் போகுமென்று ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம்.

சிகித்சை—கருப்பு எள்ளு ஒன்றேகால்தோலாவை கல்வத்திலிட்டு பசும்பால்விட்டு நன்றாகஅரைத்து கால்ரூபாயிடை ஜீனியைச்சேர்த்து அரைக்கால்படி வெள்ளாட்டுபாலில் போட்டுகலக்கி குடிக்கவும். தினம் மூன்றுவேளை இவ்விதம் உபயோகிக்கலாம்.

பசும்வெண்ணெ புதிதாக இரண்டு ரூபாயிடை எடுத்து அதில் ஜீனிசர்க்கரையை ஒரு ரூபாயிடையும் சுத்ததேன் அரைரூபாயிடையும் சேர்த்துக்கலக்கி சாப்பிடவும். தினம் மூன்றுவேளை சாப்பிடலாம்.



குறிப்பு—மூலவியாதியில் மூலத்தில் கடுப்புடன் ரக்தம்போகும். அப்பொழுது இம்மருந்துகள் உபயோகிப்பதில் அதிகபலன் இராது. அதற்கு மூலவியாதியில் தனியாக சிகித்சைசொல்லப்படும். வெள்ளாட்டுப்பாலை பச்சையாக உபயோகிப்பது மிகவும் நல்லது. காய்ச்சலுடன் வியாதிசேர்ந்திருந்தால் அப்பொழுது அவசியமானால் பாலைவடிகட்டி காய்ச்சிக்கொள்ளவும். ஜீனிசர்க்கரையை வாங்கியுபயோகிப்பதில் மிகுந்தகவனம் செலுத்தவேண்டியது அவசியம். ஏனெனில் தற்காலம் வெளிநாடுகளிலிருந்து ஜீனி இந்தியாவுக்கு வருவதால் அவைகள் பொதுவில் ருசி தித்திப்புள்ளதாகவிருந்தாலும் சரீரத்தின் ஆரோக்யத்திற்கு பொருத்தமுள்ளவைகளென்றுசொல்லமுடியாது. இந்தசர்க்கரை பலவிதமாக சேகரிக்கப்படுகின்றது. சிலகிழங்குகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றது. ஆகவே இந்தசர்க்கரைகள் எந்த மூலப்பொருள்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றனவோ அந்த மூலப்பொருள்களின் குணத்தையொட்டியே அந்தந்தசர்க்கரைகளுக்கும் குணம் தென்படுகின்றது. இந்தியாவில் உற்பத்தியாகின்ற கரும்பும் அதன்சர்கரைகளுமேஉடம்பிற்கும் ஆரோக்யமானது. மருந்துகளுக்கும் இவைகளே ஏற்றவை. பலஜாதிகரும்புகள் இந்தியாவில் உற்பத்தியாகின்றன அவைகள் குணத்தில் வேறுபட்டவைகளே. அதன்சர்கரைகளும் அவ்விதமே. நமது நூல்களில் அவைகளின் குணதாரதம்யங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை இக்காலத்தில் கவனித்து உபயோகிப்பது அசாத்யம். கரும்பின் சர்க்கரையாக இருப்பதைத்தெரிந்துஉபயோகித்தால்கூட மருந்துகளின்குணம்கெடுவதில்லை லேகியம் முதலிய மருந்துகளில் சர்க்கரையேபிரதானசரக்காக இருக்கின்றது. அனேகமாக எல்லாலேகியங்களிலும் சூர்ணங்களின் அளவுக்கு இருமடங்கு குறைவில்லாமல் சர்க்கரைசேர்க்கப்படுகின்றது. இம்மருந்துகளில் சர்க்கரையைத் தெரிந்து உபயோகிக்காவிட்டால் சர்கரையின் துற்குணம் மருந்தின் யோக்யதையையே கெடுத்துவிடுகின்றது. வைத்தியர்களின் மின்ஜாக்கிரதைக்காக ஓர் கதையை கியாபகப்படுத்தவேண்டியதவசியமாகின்றது. கூச்மாண்டரசாயனம் என்ற லேகியத்தை ஒருவைத்தியர் பலதடவைகள் தயார்செய்து நோயாளிக்குக்கொடுத்து பலதடவை பரீக்ஷை பார்த்திருக்கிறார். ஒருதடவை அதேமருந்தை மறுபடியும் தயார்செய்து அதேநோய்க்கு கொடுத்ததில் சற்றும்பலன் அளிக்கவில்லை. வைத்தியருக்கு காரணம் புலப்படாமல் தவித்தார். பிறகு அனுபவம் முதிர்ந்த ஓர் பெரியவரையண்டி காரணம் விசாரித்ததில் ஜீனிசர்க்கரையென்று தெரிந்துகொண்டு கடையிலுள்ள ஜீனிசர்க்கரையை வாங்காமல் நாட்டுசர்க்கரையை சற்று பரிஷ்காரம் செய்து உபயோகித்ததில் பலன்கண்டார். முதலில் குணம்கண்ட மரு

ந்துகளில் உபயோகிக்கப்பட்ட சர்க்கரையும் நாட்டுச்சர்க்கரையே. நமது சர்க்கரையைவிட அன்னிய நாட்டுசர்க்கரைகள் பார்வைக்கு பளபளப்பாயிருப்பதை யொட்டி குணத்தை விசாரிக்காமல் மருந்தில் சேர்த்துவிட்டார். சிலர் வடகம் வகைகளில் வெளிப்பார்வையை உத்தேசித்து ஜீனியை உபயோகிக்கின்றனர். நாட்டுச்சர்க்கரையால் வெளிப்பார்வைசற்று கெட்டபோதிலும் குணம்மிகுந்திருக்கின்றது. வெல்லத்தில் சுண்ணாம்பு மிகுந்திருப்பதால் மருந்துகளில் சேர்ப்பது தகுதியல்ல. வியாபாரத்தை பெரியதாகக்கருதி வெல்லத்தில் பலர் பல சாமான்களைசேர்க்கின்றனர். சிலர்உவர்மண்ணை சேர்க்கின்றனர். சிலர் சோடா உப்பை கலக்கின்றனர். சிலர் சுண்ணாம்பைப் பெருவாரியாகச்சேர்க்கின்றனர். ஆகையால் மருந்துகளுக்கு வெல்லத்தை உபயோகிப்பது கூடாது. வெல்லத்தில் மற்றொரு பாவச்செய்கையுமுண்டு. சிலர் அதிக இடை இருப்பதற்காக மணலைக்கொழித்து பொடிமணலையே சேர்த்துவிடுகின்றனர். ஆகையால் வைத்தியர்கள் வெல்லத்தை மருந்துக்கு உபயோகியாமலிருப்பதே நலம். அஷ்டகிராம்சர்க்கரை நமது நாட்டில் உண்டாவதாலும் பனவெல்லத்திலிருந்தே பெரும்பாலும் சேகரிக்கப்படுவதாலும் சிலமருந்துக்களுக்கு உபயோகிக்கக்கூடுமானாலும் வடமொழி வைத்தியத்தில் சொல்லப்படும் லேகியம் முதலியவைகளுக்கு கரும்புசர்க்கரையேதான் குணம் விளைவிக்கக்கூடியது கடைகளில்விற்கும் நாட்டுச்சர்க்கரைகளிலும் சற்று தோஷம் இருக்கின்றது. கரும்புப்பாலை நன்றாகவடிகட்டியும் பாலைக்காய்ச்சும்பொழுது அதில் உண்டாகும் அழுக்குகளை நன்றாக எடுத்துவிட்டும் இவ்விதம் சர்க்கரைகளை வேண்டியவளவு முந்தியேதயார்செய்து வைத்துக்கொள்ளவேண்டியது வைத்தியன் கடமை.

ரக்தாதிசார சிகித்சை— இலவம்பிசின் அரைரூபாயிடை பொடிசெய்து வெள்ளாட்டுப்பால் கால்படியில் போட்டு நன்றாகக் காய்ச்சி உபயோகிக்கவும். தினம் இரண்டுவேளை உபயோகிக்கலாம்.

குறிப்பு—இலவமரம் இரண்டுவிதமாக நம்நாட்டில் இருக்கின்றது. எந்தமரமாகவிருந்தாலும் பாதகமில்லை. மரத்தில் இருக்கும் பிசினை எடுத்துவைத்துக்கொள்ளவேண்டும். சில இடங்களில் கடைகளிலும் இது விற்கும். பிசினுடன் மரப்பட்டைகள் கலந்திருக்குமாதலால் பாலில்போட்டு காய்ச்சினபிறகு வடிகட்டியுபயோகிக்கவேண்டும்

பத்தியம்—இவ்வியாதியில் வெள்ளாட்டுப்பாலையே ஆகாரமாக உபயோகிப்பது நலம்.



குறிப்பு—காலரா, அதிசாரம், ரக்தக்கடுப்பு, இந்தவியாதிகளில் மலம்மிகவும் வெளியேறிய பிறகு வயிற்றில் சகிக்கமுடியாத வலியுண்டாகும். அது சகிக்கமுடியாமலிருக்கும். அக்காலத்தில் உள்ளுக்கு மருந்துகளைக்கொடுப்பதைவிட அடியில் சொல்லப்படும் தைலங்களில் ஏதாவது ஒன்றை தயார்செய்து ஒரு அவுன்ஸ் தைலத்தை சற்று உஷ்ணப்படுத்தி பீச்சாங்குழலில் எடுத்து ஆஸனத்தின்வழியாக உள்ளே செலுத்திவிடவும். அரைமணிகழித்து அந்தத்தைலம் வெளியில்வரும். அது உடம்பில்பற்றியதற்கு அடையாளம். அவ்விதமின்றி சீக்கிரமாக வெளியேவந்துவிட்டால் மறுபடியும் தைலத்தை உள்ளே முன்சொல்லியவிதமாக செலுத்தவேண்டும். இவ்விதம் தினம்இரண்டு தடவைவீதம் இரண்டு அல்லது மூன்றுநாள் செய்யலாம். பிறகு சில நாள் கழித்து அவசியமானால் அதேவிதமாகச் செய்யலாம். வயிற்றில் வலிதணிவதுதான் இதன் முக்கியபலன்.

தைலம்—சுக்கு 24 தோலா, தேசாவரம் தோலா 8, சித்திரை மூலம் தோலா 8, இந்துப்பு தோலா 8, ஆகியஇவைகளை ஜலம்விட்டு நன்றாகஅரைத்து நல்லெண்ணை, சின்னப்படி இரண்டில்கலக்கி பசும் தயிர் சின்னப்படி நான்குசேர்த்து மெழுகுபதத்தில்வடித்து எடுத்துக்கொள்ளவும்.

குறிப்பு—அரைத்து கலக்கவேண்டிய சாமான்களை முதலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து ஜலத்தில் கலக்கி சேர்ப்பது நலம். ஏனெனில் சித்திரைமூலம் என்ற சரக்கு ஜலத்தைவிட்டு அரைத்து எடுப்பதுசிரமம். அதைவிட இடித்துவஸ்திரகாயம் செய்துகொள்வது சுலபம். இனிவரும் தைலம் கிருதம் இவைகளிலும் இவ்விதமேசெய்துகொள்ளவேண்டும். மிகக்கடினமான சமயங்களில்இந்ததைலம் மிகுந்தநன்மையை கொடுக்கின்றது. இந்த சிகித்சையைப்பற்றி நூல்கள் கூறுவதாவது—"நெய், பால், மாம்சம், முதலிய வாதஹரவஸ்துக்களும் மலத்தைக்கட்டும் வஸ்துக்களும் ஆகிய இவைகளை ஒரு திராசுதட்டிலும் இப்பேர்பட்ட தைலங்களை பீச்சாங்குழலால் உள்ளுக்கு செலுத்துவதை ஒரு திராசுதட்டிலும் வைத்தால் பிந்தியதேகீழ்இழுக்கும்."

தைலம்—வில்வவேர், குமிழம்பழம், வாதமடக்கி, பாதிரிவேர், பெருவாகைக்காய், கண்டங்கத்திரிவேர், முள்ளிவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சிறுநெரிஞ்சிவேர், வகைக்குதோலா 12 எடுத்து நன்றாக இடித்து ஓர் புதுப்பானையில் போட்டு சின்னப்படியில் 16 படிஜலம் விட்டு நான்குபடியாக வற்றவைத்து வடிகட்டி, அதில் நல்லெண்ணை

சின்னப்படி ஒன்றுவிட்டு திப்பிலி, தேசாவரம், செவ்வியம், சித்திரை மூலம்வேர், சுக்கு வகைக்கு தோலா நான்கு எடுத்து வெய்யிலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம்செய்து ஜலத்தைவிட்டு கலக்கி எண்ணெயுடன் கலந்து அடுப்பிலேற்றி காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும்.

பிச்சாபஸ்தி—இலவமரத்தின் இளம்பிஞ்சுகளின் அடிபாகத்தை பச்சையாகக்கொண்டுவந்து அதாவது நாலுரூபாயிடை எடுத்து பச்சைதர்பம் அல்லது நாணல்களால் நன்றாக அவைகளைச்சுற்றி களிமண்ணால் நன்றாகபூசி பத்து அல்லது பதினைந்து பசும்சாணி முட்டைகளை அடுக்கி அதன் நடுவில் அந்த உருண்டையைவைத்து நெருப்பிட்டு பிறகு எடுத்து மண்ணை விலக்கி உள் நாணல்களையும் தள்ளி உள்ளிருக்கும் அந்தஇலவம்காய் பிடிப்புகளை எடுத்து கல்வத்திலிட்டு நன்றாகஅரைத்து ஒருசின்னப்படி பசும்பாலில் கரைத்து பிறகு வடிகட்டி ஆஸநத்தின்மூலமாக(எனிமாமூலமாக) உள்செலுத்தவேண்டும்.

குறிப்பு—இலவமரத்தின் புஷ்பம் அல்லது இளம் பிஞ்சுகளின் அடிபாகம் அதாவது கிளைகளின் இலைபாகத்தில் இருக்கும் பாகம். இதற்குவடமொழியில் விருந்தமெனப்பெயர். உலராமல் பச்சையாக விருக்கவேண்டும். ஆற்றுநாணல்களின் அடிகட்டையைவிலக்கி நுணிகள் ஒருமுழம் அல்லதுசாண்களாக நறுக்கிக்கொள்ளவேண்டும் கட்டைவிரல்பெருமனுக்கு நன்றாக அவைகளின்மேல்சுற்றவேண்டும். பிறகு களிமண்ணை ஈரத்துடன் கொண்டுவந்து அந்த உருண்டையின் பேரில் கட்டைவிரல் பெருமன் பூசவேண்டும் வெய்யிலில் காயவைக்காமல் அப்படியே அதை முட்டைகளுக்கு நடுவில்வைத்து நெருப்பு பற்றவைக்கவேண்டும். இவ்விடத்தில் முட்டைகள் கணக்குப்படி உபயோகிக்கவேண்டிய அவசியமில்லை. மேலே பூசியிருக்கும் மண் அந்த நெருப்பால் நன்றாகக்காய்ந்துபோவதுதான் அவசியம். அதிக முட்டைகளைப்போட்டாலும்கூட அந்தபதம் பார்த்து முட்டைகளை கலைத்து அப்புறப்படுத்தி ஆறியபிறகு எடுத்துக்கொள்ளவேண்டும். குறைந்த முட்டைகள் போட்டாலும் அந்தபதம் வராவிட்டால் அப்பொழுது அதிகமுட்டைகளை கூட்டலாம். நடுவில் நெருப்பைக்கலைத்து எடுக்கக்கூடாதென்ற நிர்பந்தம் இதற்குக்கிடையாது. இது ஓர் அபூர்வமானமுறை. மிகுந்த அனுபோக முள்ளது. பார்வைக்கு அலக்ஷியமாகத்தோன்றினும் ஒரு தடவை உபயோகித்தவர்கள் இதை அலக்ஷியம்செய்யமாட்டார்கள். சிறுகுழந்தைகளுக்கும் இதை உபயோகிக்கலாம். ஆறுமாதக்குழந்தைகளுக்கு அரைஅவுன்சு பீச்சாங்குழல் மூலமாகஉபயோகிக்கவேண்டும். வயதுக்குத்தக்கபடி உயர்த்திக்கொள்



ளவேண்டும். இதில்தகரவேர், அதிமதுரம், வகைக்கு தோலாமூன்று ஜலத்தைவிட்டரைத்து கலக்கி நல்லெண்ணை, தேன், நெய், வகைக்கு ஒருஅவுன்சு வீதம் சேர்த்து உபயோகித்தால் இன்னும் விசேஷ நன்மையுண்டாகும். இவைகளைச்சேர்த்து உபயோகிக்கவேண்டியதுதான் சாஸ்திரமுறை. சாசிபக்கம் பெரியோர்கள் சேர்க்காமலும் உபயோகித்துவருகின்றனர். இதை உபயோகித்து கால்மணிவரை வயிற்றில் தங்கி பிறகுவந்தால் மிகவும் நல்லது. தினம் ஒருதடவைபாக இரண்டு மூன்று தினங்கள் விடாமலும் ஒவ்வொரு நாள்விட்டும் உபயோகிக்கலாம். ஆங்கிலத்தில் எனிமா என்றபெயருடன் செய்யப்படும் சிகித்சை வெகு புராதனமாக நமது முன்னோர்களால் உபயோகிக்கப்பட்டுவந்ததே ஜர்மன்டாக்டரான கூனியவர்களும் நம்மிடமிருந்தே இந்தத்தகவலை உணர்ந்தார். நமதுமுறைகளில எனிமா ஒவ்வொருவியாதிக்கும் பிரத்தியேகமாக மருந்து முறையில் உபயோகிக்கப்படுகிறது. இதர முறைகளில் சுத்தத்தண்ணீரில் சோப்பைக்கரைத்தும் மற்றும் கிளிசிரைன் முதலியவைகளைச்சேர்த்தும் ஏதோ மலநிவர்த்திக்காகமாத்திரம் உபயோகப்படுகின்றது.

கிரஹணீ—முன் சொன்ன அதிசாரம் என்ற வியாதியை உபேக்ஷித்தால் அது கிரஹணீயாக முற்றிவிடுகின்றது. அதிசாரங்களில் வாயைக்கட்டாமல் நாக்குக்கு வேண்டியபடி மனம்போனபடி தகாத ஆகாரங்களையே உட்கொள்ளுவதால் அக்கினி பலம் மிகவும் குறைந்து இந்தவியாதியுண்டாகின்றது. ஆகையால் அதிசாரமும் கிரஹணீயும் ஒன்றுக்கொன்று மிக சம்மந்தமுள்ளது. நமது நாட்டில் கிராணி, கழிச்சல் என்று இதையழைப்பார்கள். ஆங்கிலத்தில் இதை தனியாக அழைப்பதில்லை. இவ்வியாதி புருடர்களுக்கும் பெண்களுக்கும் இரு பாலருக்கும் வருவதுண்டு. பிரசவித்த ஸ்திரீகளுக்கு அதிகம் இவ்வியாதி வருவதையொட்டி கிரஹணீ என்பது ஸ்திரீகளுக்குத்தான் வரும் என்று சில சுதேசவைத்தியர்கள் நினைப்பதுண்டு. உண்மையில் எல்லாவியாதிகளும் எல்லாருக்கும் வரக்கூடுமானாலும் சில வியாதி சிலருக்கே அதிகமாக காண்கின்றது. டயபிடீஸ் என்ற நீரிழிவு வியாதி புருடர்களுக்கே அதிகம் காண்கின்றது. ஸ்திரீகளுக்கு சற்று மிதமாகத்தோன்றுகிறது.

இவ்வியாதியின் முற்குறிகளாவன—சரீரம் இளைக்க ஆரம்பித்தல் உட்கொண்ட ஆகாரம் வெகுநாழிகைக்குப்பிறகு ஜீர்ணமாதல் புளியேப்பம், வாயில் அதிகம் நீர்ஊறுதல், வாய் அசுங்கியமாக இருத்தல், அரோசகம், அதிகதாகம், சரீரம் துவண்டுபோதல், தலைகிறுகிறு

ப்பு, வயிற்றுப் பொருமல், வாந்தி, காது இரைச்சல், வயிற்றில் இரைச்சல் ஆகியவைகளே.

இவ்வியாதியின் அடையாளங்கள்—சரீரம் நன்றாக இளைத்தல் கண் எரிச்சல், மேல்மூச்சு, சிறியகாங்கை, மூர்ச்சை, தலைவலி, கை கால்களில் வீக்கம், ஆகியவைகள்.

கிரஹணீ நான்கு விதமாக வகுக்கப்படுகின்றது.

(1) வாதகிரஹணீ லக்ஷணம்—வாய்உலர்ந்துபோகும். கண்களின் சக்தி அதாவது பார்வைகெடும். காதுகளில் இரைச்சல் கேழ்க்கும். சரீரத்தில் இரண்டு அள்ளைகளிலும், தொடைகளிலும், தொடைஇடுக்கு களிலும், கழுத்திலும், வலியுண்டாகும். அடிக்கடி வாந்தியும், பேதி யும் தோன்றும். அறுவகைசுவைகளிலும் நோக்கமுண்டாகும். பசியும் தாகமும் காணும். பரிகர்த்திகா அதாவது மலதுவாரத்தில்கத்தரியால் கத்தரிப்பது போன்ற வேதனையுண்டாகும். ஆகாரம் ஜரிக்கும்தருவா யிலும் ஜீர்ணமாகிய பிறகும் வயிற்றும்பொருமல் காணும். சாப்பிட்ட வுடன் உடம்பு ஆரோக்கியமாயிருப்பதுபோல தோன்றும் அந்தசமய த்தில் வயிற்றுப்பொருமல் தணியும். வாதவியாதி, ஹிருதயவியாதி, குன்மம் மூலம், ப்லீஹா அதாவது enlargement of spleen. பாண்டு இக்கவியாதிகளில் ஏதாவது ஒன்று தனக்கு வரப்போவதாக நோயா ளிக்குத்தோன்றும். ஆஸநத்தில் கடுப்பும், காசமும், சுவாஸமும் உண்டாகும். கஷ்டப்பட்டு வெகுநாழிகை முக்கியபிறகு மலம் உடை ந்தாவது அல்லது கெட்டியாகவாவது சிறுத்து ஆமத்துடனும் நுரை த்தும் சப்தத்துடனும் போகும் ஒரேதினத்தில் அடிக்கடி பலதடவை மலம்போகும்.

(2) பித்தகிரஹணீ லக்ஷணம்—மலம் கருப்பாகவும், அல்லது மஞ் சள் நிறமாகவும் உடைந்துபோகும். நோயாளி முகம் மஞ்சள்நிறமாக விருக்கும். ஏப்பம் நாற்றத்துடன் புளிப்பாக இருக்கும். மார்பிலும் கழுத்திலும் எரிச்சல்காணும். அரோசகம்தாகம் இவைகாணும்.

(3) கபகிரஹணீலக்ஷணம்—உட்கொண்ட ஆகாரம்ஜீர்ணமாக வெகு நாழிகைசெல்லும். அதிலும் கஷ்டப்பட்டே ஜீர்ணமாகும். வாந்திஅதி கம் தோன்றும். அரோசகம் மிகுந்திருக்கும் நாக்கில் மாசுபடிந்திருக் கும். நோயாளி அதிகமாக காரிஎச்சல் உமிழ்வான். இருமல், ஒக்கா ளம், பீநசம்இவைகாணும். ஹிருதயம் பெருத்துவிட்டதாக நோயாளி நினைப்பான். வயிறுவிரைப்பாகவும் கனமாகவும் இருக்கும். ஏப்பம் நாற்றத்துடன் தித்திப்பாக இருக்கும், பெண் இச்சையிராது. மலம் உடைந்தும் ஆமத்துடனும் கபம் நிரைந்தும் அதிகமாகவும் போகும். சரீரம் மிகவும் இளைக்காவிட்டாலும் ஒய்ச்சல் அதிகமாகவிருக்கும்.

21051

தமிழ்நாடு கூறுவதின் சுருக்கம்:— சுதேசவைத்திய முறையாகிய ஆயுர்வேதத்தின் நன்மைகளை ஜனங்களுக்குப் புகட்டிப் பரப்புவதற்கும் மற்ற வைத்திய முறைகளைவிட உண்டான குணு கிசயங்களை எடுத்துக்காட்டவும். இது சாஸ்திரீயமானதல்லவென்றும் ஆராய்ச்சிசெய்து ஏற்பட்டதல்லவென்றும் சொல்லுவோர்க்கு பதில்அளிப்பதற்கும் ஏற்பட்ட ஓர்பத்திரிகை.
குரோதன ஸ்ரீ ஆவணி-மீ 1-உ

தமிழ்ப் பொழில் கூறுவதின் சுருக்கம்:— வைத்திய சந்திரிகா நமது நாட்டில் நிகழும் தமிழ் மருத்துவமுறை வடமொழி மருத்துவ முறை முதலிய நாட்டு மருத்துவ முறைகளைப் போற்றும் முன் வந்திருப்பதாகும். திருவள்ளுவரும் மருந்தும், தமிழ் வைத்தியம் என்ற தலைப்புகள் பத்திராதிபருக்கு தமிழ் மருத்துவத்திலுள்ள அன்பைக்காட்டுகின்றன.

வந்தேமாதரம்.

ஸ்ரீ பார்த்தஸாரதி ஐயங்கார் அவர்கள் இயற்றிய
"சத்திய விரதன்."
என்னும் அருமையான தமிழ் நாவல்.
பல நூறு பிரதிகள் விளம்பரமின்றியே தீர்ந்து விட்டன.
தமிழ் நாகரீகத்தையே உரைப்பது. கற்பின் திண்மையையும், சத்தியத்தின் மேன்மையையும் செவ்வனே எடுத்துக்கூறுவது. பண்டிதர்களாலும் பத்திரிகைகளாலும் புகழப்படுவது.

அபிப்பிராயம்.

நவசக்தி எழுதுகிறது:—இந்நூல் நயம்பட எழுதப்பட்டிருக்கிறது. கதையை வீணாகவளர்க்காமல் சுருக்கமாகவும் அனைவருக்கும் விளங்கும்படியாயும் எழுதப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

சம்பநாடர் எழுதுகிறது:— இது சிறிய நூலாயிருப்பினும் மிகச் சுவையுடனிருக்கிறது. மற்ற புஸ்தகங்களைப்போல அனாவசியமான அதிக வர்ணனையின்றி எழுதப்பட்டிருக்கிறது.

வ. வே. சு. ஐயர், தேசபக்தன் எழுதுகிறார்:— இத்தற்காலத்தில் வெளிவரும் பெரும்பாலும் நாகரீகங்களை மறந்து நமநாட்டு நாகரீகம்போலக்காட்டும் போலி நாவல்களைப்போன்ற கதையன்று. கதை துவக்கத்தின் முடிவுவரை சுவைமிகுந்ததாயிருக்கிறது.

விலை அணா எட்டு. உடனே எழுதுங்கள். சொற்பமிருக்கின்றன.
பீதி. 100க்கு 40 கமிஷன்.

ஸ்ரீநிவாஸராகவாச்சாரி.
வேங்கரை P. O., (வ) புதூர் S. I. R.